# தரிசனம்

ஜோசப் பாலா

மணி ஓசை வெளியீடு - 3

RangaRakes Tamilnavarasam.com

## என்னுரை

வாழ்வின் அனுபவத்தில் நாம் தினமும் சந்திக்கும் நிகழ்வுகளை ஒன்றுபடுத்தி சிறுகதைப் படைப்பாகத் தர முயன்றதன் பயன்தான் இன்று உங்கள் கரங்களிற் தவழ்ந்திடும் இந்நூல்.

வாசக நண்பர்கள் தந்த ஊக்கத்தால் எனது படைப்புக்களான உணராத உண்மைகள், திருப்பம், தொடரில் இத் தரிசனம் மூன்றாவது 'மணி ஓசை' வெளியீடாக வெளி வருகிறது.

இன்றைய காலத்தின் நிகழ்வுகளைப் படைப்பதற்கு எம் மண்ணில் கருக்களைத் தேடி அலைய வேண்டிய தேவை ஏற்படவில்லை. அவற்றின் பதிவுகளை உதிரிப் பூக்களாகச் சிதறவிடாது தொகுத்து கதம்பமாக வெளியிடும் நோக்கம் கூட காலத்தின் தேவைதான்.

எனது முயற்சிக்கு ஊக்கமும், உற்சாகமும், ஆலோசனையும் தந்தவர்களுக்கும், 'தரிசனத்தில்' மலரும் பத்து கதைகளையும் ஏற்கனவே வெளியிட்ட பாதுகாவலன், ஈழநாதம், புதிய உலகம், சாளரம், சிரித்திரன் பத்திரிகை - சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் எனது இதய நன்றிகள்.

வாசக இதயங்களின் தரிசனம் கிடைத்த எனக்கு தங்களின் கருத்துக்களும் ஆலோசனையும் தொடர்ந்து துணை நிற்கும் என்ற மன உறுதியோடு உங்கள் கரங்களிற் சமர்ப்பிக்கிறேன்.

ஜோசப் பாலா

# புதிய பாதை

பாலைவனப் பயணிகள் போன்று அப் பகுதிக்குப் போய் வரும் காலத்தில் காட்சியளித்த அந்த மணற்றரையை இன்று பார்த்தபோது விமலனுக்கு வியப்பாய் இருந்தது. விமலன் தன் தங்கை புவனாவுக்கு வரன் தேடி அலைந்த வேளை, அந்தப் பகுதியில் அன்றாட வாழ்க்கைச் செலவினைப் போக்கப் பிரயாசையுடன் உழைக்கும் தொழிலாளிகளாகத்தான் பலரும் இருந்தனர்.

அவர்கள் வாழ்வு விமலனுக்கு ஏற்றுக் கொள்ள முடியா விட்டாலும் சீரும் சிறப்பும் என்ற போர்வையில் கறுப்புப் பணம் போல் சீதனச் சுமைகளை எண்ணிக் கொடுக்க வசதி இல்லாத விமலன், ஒரு சாதாரண குடும்பத்திலே சந்திரனை



RangaRakes
Tamilnavarasam.com

புவனாவிற்கு திருமணம் செய்து வைத்து, தன் பணி முடிந்த தென குமாஸ்தா வேலையோடு கொழும்பிலே தங்கிவிட்டான்.

படித்து பலதரப்பட்ட பட்டம் பெற்ற அரச உத்தியோகத்தர் முதல் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் நடுத்தர வர்க்கத்தை உடையவர்கள் வரை நகரப் புறத்தை நாடும்போது, பலரது கடின உழைப்புக்குக் கை கொடுக்கும் இடமாக கடலோரப் பகுதியில் கடற்றொழிலோடு தென்னந் தோட்டம், வயல்கள் எனச் சூழ்ந்திருந்த பரந்த வெளித் தோற்றம் கொண்ட அப்பகுதி புவனாவுக்கு மட்டுமல்ல, புதிய இடச் சூழலில் குடியேறிய பலரும் தமது சொந்த நிலமாகக் கூறிக் கொள்வதில்லை.

ஏதோ பட்டும் படாமல் தொட்டதற்கெல்லாம் பிறந்த ஊர் உறவுகள் என தூரத்தே சொல்லித் தற்காலிக இருப்பிடமாக கழித்த காலம், கடற்றொழிலும் அதன் வருவாய்க்கு நிகரில்லா தொழில்வள முன்னேற்றமும் புவனாவின் குடும்பத்தைப் போல, புதிய குடியேற்ற வாசிகளும் நிரந்தர இல்லிடங்களைக் கட்டி எழுப்புவதிலும், புதிய குடிகள் வந்தேறுவதிலும் அப்பகுதி விரைவான வளர்ச்சி கண்டிருந்தது.

வெளித் தொடர்புகள் அற்ற குடும்பப் பெண்களும் தமது கணவனின் தொழிலிற்கு வீட்டிலிருந்தே தம்மால் உதவும் பணிகளோடு திருவிழாக்கள், திருமணங்கள் எனத் தொடர்புகள் வளர்ந்து அவ்வூரே வளர்ச்சியடைந்த குடியேற்ற வாசிகளாக மாறினர். அந்நிலை கடல் தொழிலில் மட்டும் அக்கறை செலுத்தாது துணைத் தொழிலையும் நாடத் தூண்டியது.

விமலனுக்கு லீவுகாலம் வந்தால் புவனாவுக்கு அண்ணன் வரவு புதுவருடப் பிறப்புக்களை ஞாபகமூட்டும். மாதச் சம்



பளத்தில் ஆண்டுக்கொரு முறை வருவதே விமலனின் வருவாய்க்கு ஏற்ற பயணமாகப் பட்டது. புவனாவுக்கு ஏற்ற கணவனாக சந்திரனின் பிரயாசை ஆண்டுக்கொரு மாற்றம் கண்டு தென்னந் தோட்டங்களும், வயல்களும், கடற்றொழிலின் முன்னேற்றங்கள் போல் வாரிசுகளாக மூன்று பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் பெற்று வசதியாக வாழ்வது விமலனுக்கு மகிழ்வைக் கொடுத்தாலும், ''புவனா நீ கொஞ்சம் சிக்கனமாய் வாழப் பழகிக் கொள்'' என கூறியபோது,

''ஏன் அண்ணை அப்பிடி சொல்லிறியள்? ஏன் அவர் கஞ்சத்தனமா காட்டினார்? பிள்ளைகளுக்குத்தானே எண்டு எதையும் செய்யேக்க நீங்கள் இப்படி ஏன் நினைக்கிறியள்?''

''புவனா அதெல்லாம் இப்ப தெரியாது. பின்னுக்கு மூண்டு பெட்டையளுக்கும் சேர்க்கவேணும். யோசிச்சு செலவு செய்யப் பழகிக் கொள். இதை யாரும் சொல்லித் தரமாட்டினம்.''

''எப்பவோ நடக்க இருக்கிறதுக்கு இப்பவே அதுகளை வாட்டி சேர்க்கோணுமா அண்ணே.''

''இப்பவே சேர்த்தாத்தானே பெண்ணை பெத்த நீங்க தப்பலாம்.'' என்று விமலன் கூறுகையில் வாசலில் வந்த உழவு இயந்திரத்தின் இரைச்சல் புவனாவின் பேச்சை இடை நிறுத்தியது.

''யாரு? சந்திரன் மச்சானா? எப்ப பழகினவர் இதெல்லாம்?'' என்ற குரலோடு வாசலை நோக்கி நின்றான் விமலன்.

''உழவு இயந்திரம் முற்றத்துக்கு வந்து நின்றதும் பிள்ளைகள் ஓடிவர சந்திரன் விமலனைக் கண்டு ''மச்சான்



RangaRakes
Tamilnavarasam.com

எப்பிடி? புதுசா எடுத்து, முதல் வரேக்க உங்கட முழுவி யளம் நல்லதுக்குத்தான்'' என்ற அவனது உள்ளத்தில் எழுந்த வார்த்தைகள் விமலனுக்கு மகிழ்ச்சியூட்டியது.

வீட்டில் உள்ளோரின் குதூகலமும், பிள்ளைகள் சுற்றிச் சுற்றியே உளவு இயந்திரத்தினைப் பார்த்து ரசிப்பதும் கண்டு புவனாவின் புன்னகையில் புதிய தென்பு பிறந்தது.

''எப்பிடி இதுக்கெல்லாம் காசு! கனக்க வருமே? என்ன முடிஞ்சுது மச்சான்'' என்றான் விமலன்.

''முழுதுமா இரண்டரை முடியுது. அரைவாசி கட்டி எடுத்தனான். பிறகு உழைச்சுக் கட்ட வேண்டியதுதான்.''

''அப்படி கட்ட எல்லாம் நாங்க நினைச்சா முடியுமா மச்சான்?'' என்ற ஏக்கத் தொனி அவனது அரச உழைப்பால் நிரந்தரமாக வரும் மூவாயிரத்தை அண்டிய வருவாயைக் கொண்டே சிந்தித்தவிமலனுக்கு.

''இதென்ன மச்சான் விமல், பெரிசா யோசிக்க என்ன கிடக்கு. முயற்சித்தா ஆறு மாசத்தில கட்டி விடலாம். முற்பணம் கட்டவே வழி தெரியாம இருக்க, புவனா சொன்னா கட்டி எடுப்பம் எண்டு. ஏதோ வைச்சதை எடுத்த மாதிரி, எடுக்கப் போகும் வரைக்கும் நான் நம்பேல்லை. சீட்டு சீட்டு எண்டு சேர்ந்ததோட மாறித் தந்ததிலை தான் இதையும் எடுத்தனான். நீங்க கந்தோரில எத்தனை நிர்வாகம் பார்ப்பியளோ, அதை விட புவனாவின் நிர்வாகத்தில் இந்த வீட்டின்ர வளர்ச்சி அதிகம் தங்கியிருக்கப்பா.''

இந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் புவனாவின் முகத்தில் புதுத் தென்பையும், மகிழ்வையும் ஊட்டி சிவந்த கன்னங்கள் சந்திரனின் பார்வையில் அவளின் இளமைத் தோற்றத்தை மீண்டும் ஞாபகப்படுத்தின.



''பிள்ளைகளும் அண்ணனுமாக கோயிலுக்குப் போய் பொங்கீற்று வாங்கோ. நான் எல்லாம் எடுத்திட்டு வாறன்'' என்ற புவனாவின் இதயம் பொங்கும் மகிழ்வோடு இறைவனுக்கு நன்றிப் பொங்கலிடப் புறப்பட்டனர்.

அரச உத்தியோகம் புருஷ லட்சணம் எண்டு எப்பிடி அலைஞ்சாலும் ஆகக் கூடியது மூவாயிரத்தைப் பெற்று...... எது நினைச்சாலும் நடக்குமா? எத்தின வயது வந்தாலும் எங்களுக்கு அதிகாரிகள், அரசியல்வாதிகள் எண்டு எங்களை நடப்பிக்கிறதை விட சுதந்திரமாக தன்னுழைப்பும், தன் குடும்பமும் என்று கூட்டாக முன்னேறும் இந்த மகிழ்ச்சி எப்பிடி வரும். ஏதோ மாயையில் நாற்காலி உத்தியோகத்திற்காக அலைஞ்சு அதில சுகம் காண விளைஞ்சா சுதந்திரமா சிந்திக்கக் கூட வழியில்லைத்தான் என மனது உறுத்திக் கொண்டது விமலனுக்கு.

இந்த முன்னேற்றம் தனி ஒரு தங்கை புவனா வீட்டில் மட்டுமல்ல, அப்பகுதியில் சுற்றி வரும் போது வீதியில் செல்லும் வாகனங்களும், காணப்படும் வீடுகளிலும் மாற்றத்தைத் தோற்றுவித்தது உயர்ந்து வளர்ந்த தென்னந் தோப்புகள் போன்றே குடிமனைகள் எல்லாம் வீட்டுச் சிறப்பும் வாகனமும் என வளர்ச்சி கண்டிருந்தன. கடின உழைப்பில் ஆண்களுக்கு பெண்கள் சளைத்தவர் அல்ல, என குடிசைக் கைத்தொழில்களாலும் வளர்ச்சியுறும் தனித்துவமே அக்கிராமத்தின் வளர்ச்சியாக, பெண்களின் உழைப்புக்குச் சான்று பகர்ந்தன.

காலங்கள் விரைவாகக் கரைந்தன. நாட்டுச் சூழல் கால மாற்றத்தால் குருவிக் கூட்டைக் குலைத்தது போன்று ஊரையே உலுப்பி விட்ட இனக் கலவரத் தாக்குதல்கள் அமைதிக் கிராமத்தின் நிம்மதியைக் குலைத்து விட்டது.



RangaRakes

Tamilnavarasam.com

இது ஒரு கிராமத்தின் மாற்றத்தை மட்டுமல்ல இந்த நாட்டுக்கே ஏற்பட்ட சாபக்கேடாகியதில் எங்கும் இடம் பெயர்ந்தவரும், தொழில் இழந்தவரும், உறவை இழந்தவரும், சொத்திழந்தவரும் என உலுப்பி விட்ட நிகழ்வுகள் தொடர்வதால் இதில் தப்பிக்க எவராலும் முடியவில்லை. எந்த கோடீஸ்வரனும் ஆட்டம் கண்டு விட்ட நிலையில் அந்த அமைதிக் கிராமம், புவனாவின் குடும்பத்தின் உழைப்புகள் யாவும் மண்ணைத் தவிர மற்றவையெல்லாம் அரக்கரின் அழிப்புக்கு இலக்காகி விட்டது. மீண்டும் அந்தக் கிராமத்துக்குச் சென்று வாழ முற்படுகையில் விமலனும் கொழும்பில் இருந்து அகதியாக்கப்பட்ட நிலையில் அங்கு வந்து சேர்ந்தான்.

எதையெல்லாம் இழந்தாலும், பனைமரம் போல் மன உறுதியை இழந்து விடாத மக்கள், புதிய குடிகள் போல், முறிந்த பனை, சரிந்த தென்னை, வாழைகளுடன் எரிந்த நிலையில் காட்சி தரும் வீடுகளையும் வாகனங்களையும் புதுப்பித்து தங்கவும் ஓர் இடம் அமைத்துப் புது வாழ்வைத் தொடர்ந்தனர்.

பெரும் தொழில் பார்த்துப் பழக்கப்பட்ட ஆணினத்தின் எக்கமெல்லாம் எப்படி வாழ்வது? என்று அங்கலாய்க்கும் வேளையில் தம் பலத்தால் வாழ முடியும் என்பதையே உணர்த்திய குடிசைத் தொழில்கள் மீண்டும் துளிர்விடத் தொடங்கின.

புவனா தன் பிள்ளைகளுடன் முழுமூச்சாகச் செயற்பட்டாள். பொச்சுமட்டைகள், பாளைகள், ஓலைகள் எல்லாம் புதிய தொழில்களாய்ப் பெருகின. கடல் எல்லைகள் யாவும் பாதுகாப்பற்ற பிரதேசமாக மாறின. அதனால் கடற்றொழிலும் ஆண்களுக்குக் கை கொடுக்கவில்லை.



இழப்புக்கள் ஒவ்வொன்றும் புதிய படிப்பினையைக் கொடுத்தது. எமது கூரைவேலி அடைப்புக்கே வேற்று இடத்தில் இருந்துதான் கயிறு வரவேண்டுமா? அதனைப் பூர்த்தி செய்வதில் அக்கிராமமே முன்னின்று உழைத்தது. இவை காலத் தேவையால் ஏற்பட்ட விளைவுகள்தான். இழப்புகளால் கற்றுக் கொண்ட பாடம்தான் இவை.

மீண்டும் புதிதாய் புதிய தளிர்கள் தோன்றின. இழப்புக்கள் யாவும் இளசுகளின் மனதில் புது வேகம் கொடுத்தன. உழைப்பிலும் அவர்கள் ஒன்றாய் இணைந்தனர். கடலில் பொச்சுத் தாழ்ப்பதிலும், பிள்ளைகள் ஓலை பின்னுவதிலும், பொச்சுமட்டை, ஓலைகளைச் சேகரிப்பதிலும் புவனாவின் கணவன் சந்திரனும் உதவியாய் இருந்தான். இதையெல்லாம் அன்று சிந்திக்கக் கூட இல்லையே என்ற மன உழைச்சலுடன் அவ் வேலைகளைப் பழகிக் கொள்வதில் ஆர்வம் கொண்டவனாய்ச் செயற்பட்டான்.

''சந்திரன் மச்சான்'' நானும் உன்னோடு வந்து வேலை செய்யவா என்றான் விமல்.

''இதில எனக்கே வேலை காணாது மச்சான். ஏதோ இந்த வேலைகள் புவனாவுக்குத் தெரிஞ்சதால் உலை ஏற உதவியாய் இருக்கு, பிள்ளைகளும் பழகி விட்டுதுகள். அதுகள் தங்களுக்கும் உழைச்சுப் பள்ளிச் செலவையும் கவனிக்குதுகள். எல்லாத்துக்கும் ஆதாரமா ஒரு கைத்தொழில் ஒண்டு இருக்க வேணுமெண்டு பாத்தியோ?''

''அதுகள் தானே இப்ப எங்க வயித்துக்கு உழைக்குதுகள். எங்கட மேசை வேலையை நம்பி அங்க போனா உயிரும் எல்லோ போயிடும். அதிலும் பார்க்க கைத்தொழிலின் மகத்துவத்தை, எங்கட பிள்ளையளின்ர மனநிலையிலையும் உணர்த்தவேணும். இதில பெண்ணுக்கு ஆண் சரிநிகர் என்றதைவிட ஒருபடி மேல் எண்டு சொல்ல வேணும்.'' வெறுங்



RangaRakes

Tamilnavarasam.com

பெண் உரிமை, அடிமை என்று பேசிறதை விட தன் உழைப்பால் தாங்களாக முன்னேறுவதைப் பாத்தா எந்த விடுதலைக்கும் தன் காலில் நின்றால் எதையும் சாதிக்கலாம் எண்டத உன்ர பிள்ளையளிட்ட படிச்சன் மச்சான்'' என்றான் விமல்.

''நம்ம வீட்டில என்ன! இந்தக் கிராமத்திலேயே இப்ப பெண்கள் உழைப்பும் அவர்கள் காலத்துக்கு ஏற்றதா குடும்பத்தை நடத்திறதாலதான் இப்பிடி வாழ முடியுது. இல்லையெண்டா இந்த அழிவுகளை நினைச்சு குடியும், தற்கொலைகளும் பெருகியிருக்கும். பிஞ்சுகளின்ர மனதில உள்ள உறுதி எங்களுக்கும் எல்லோ சவாலாயிருக்கு'' என்ற சந்திரனின் பேச்சுக்கிடையில்,

''அண்ணே! அண்ணே! புவனாக்கா நிக்கிறாவா?'' என்ற குரல் கேட்டு வாசலை நோக்கினான்.

''தாரு தம்பி! என்ன வேணும்?'' என்ற குரலோடு வாசலை அடைந்தான் சந்திரன்.

''கயிறு, ஓலை கொஞ்சம் அதிகம் வேணும். அதுதான் முற்பணமும் கொடுத்து விலைகளைப் பேசிப் போவோம் எண்டு வந்தனான்......'' என்றவனுக்கு,

''தம்பி! இருங்கோ கடற்கரையில பொச்சுத் தாழ்க்கப் போனவ, கூட்டி வாறன்.'' என்றபடி புறப்பட்ட சந்திரனுடன் விமலும் கடற்கரை பார்க்கச் சென்றான்.

வயலில் பாத்தி கட்டும் தொழிலாளிகள் போன்று மண்வெட்டிகளுடன் புதிய விடுதலை வேண்டிப் பெண்கள் கூட்டம் கடலை உழுது கொண்டு கடும் உழைப்புடன் கூட்டு முயற்சியாகச் செய்து கொள்வதும், வீதிகள் எங்கும் தொழிலகங்களாக, கயிறு திரிப்புகள், தும்புக்கட்டைத் தொழில்கள், கிடுகு பின்னல்கள் என்பனவும், அதனைப் பெற பல பாகமும் இருந்து வரும் வியாபாரிகளும், சமூக நிறுவனங்களும் முண்டியடிப்பதும் தொழிலின் மகத்துவத்தை புரிய வைத்தன விமலனுக்கு.

''ஏன் வந்தனீங்க விமல் அண்ணே? கொஞ்சத்தால நானே வந்திடுவன் தானே!''

''அதில்லைப் புவனா கயித்துக்கு வீட்ட வந்தாங்க அதுதான் விலை விபரம் தெரியாம மச்சானோட வந்தன்.''

''இண்டைக்கு விலை கூடியிருக்கு. பொச்சுகள் எல்லாம் விலையாம். சங்கம் எடுத்து மலிவு விலையில் தருகுதாம். கயிறு திரிக்கிற மெசினும் அதால வாங்கலாம். இனி சங்கத்தாலதான் எதுவும்......''

விமலனுக்கு வியப்பைக் கொடுத்தது. தங்கை புவனாவா இத்தனை தெளிவாக எதிர்காலத் திட்டத்தோட பதில் சொல்வது? அப்படியென்றால் உழைக்கும் பெண்களுக்கு உரிமை கேட்டுப் பெற வேண்டியதில்லையே. அவளது உழைப்பும் உயர்வும் விடுதலை வாழ்வை அமைக்க வெறும் கோஷங்கள் போட்டு பயனில்லை என்பதை உணர்த்திற்று.

இந்த அழிவுகள் யாவும் ஆக்கத்தின் ஆரம்பமாக மாறி அந்த அமைதிக் கிராமம் வழிகாட்டி நின்றது. ●

மார்கழி – 1991





RangaRakes
Tamilnavarasam.com

# புதிய பரம்பரை

இரும்புக் கேற்றின் சங்கிலியை தட்டிய படி அவன் 'ஐயா!... ஐயா...!' எனக் குரல் கொடுத்தான்.

''தாரது! இந்த நேரத்தில், ஆறுதலா சாப்பிட்டு படுப்பம் எண்டா ஆரப்பா அது?''

''ஐயா! நாயைப் பிடியுங்கோ. ஐயா! நாயைப் பிடியுங்க, கடிக்க வருது.''

''அது கட்டி நிக்கு. ஏன் இந்த சாப் பாட்டு நேரத்தில வாறாய்? இப்ப வந்தா கடிக்கும் தானே பின்ன...''

பூட்டிய கதவினுள் இருந்துவரும் குலுரம், குலைக்கும் நாயின் சத்தமும், சங்கிலியின் கரகரப்பும் சேர்ந்து அவன் பயத்தினை இரட்டிப்பாக்கியது. பூட்டைத் திறக்கும் சத்தம் ஒரு ஆறு தலைத் தந்தாலும், பதட்டம் இப்போ பசியைத் தீர்க்குமா என்பதுதான்.

''எட, நீயா! என்ன ஏதோ வைச்சத எடுக்க வந்த மாதிரி உள்ளுக்க வரப்பாக்கிறாய். அங்க... அங்க நிண்டு கொள், இஞ்ச வந்திடாத.''

''பசிக்குது ஐயா! சாப்பிட்டு மூணு நாளாச்சு, தலையைச் சுத்துதய்யா. ஏதும் பழசு இருந்தா தாங்கையா,''

''ஏன்ரா, மத்தியானம் இப்ப, பழசு எங்க இருக்கப் போகுது. சாப்பிடுகிற நேரம் வந்திடாத, ஜிம்மி பாய்ஞ் சிடும். இப்ப வேற எங்கயாலும் பார். பின்னேரம் வா பாப்பம்.''

''ஐயா! இப்ப யாரிட்ட போவன். எல்லாரும் இதைத் தான் சொல்லி, இல்லை இல்லை என்கிறாங்க. சொந்த வீடிருந்தா இஞ்ச வருவனாய்யா?''

''ஓ! அப்ப நீ அகதியா? அதுதானே பாத்தன், ஊருக்குப் புதுசாய் இருக்கிறாய் எண்டு'' என்று சினந்தார் முத்து லிங்கம் முதலாளி.

''ஐயா! உள்ளுக்க வாறனய்யா, வெய்யிலும் சுடுது. தண்ணி ஆச்சும் கொஞ்சம் தாங்க ஐயா.'' என்ற அவனது உடலோடு ஒட்டிய கிழிந்த பெனியனும், தளர்ந்த குரலும், பஞ்சத்தின் வடுக்களை நினைவூட்டி நின்றன.

''அட... அட உங்களைத் தெரியுமடா. சுண்ணாம்பு கேட்டு, பின்னுக்கு படுக்க இடமும் கேட்டுக் குந்திடுவீங்க. சரி... சரி தண்ணியை குடிச்சிட்டு கெதியா போயிடு. சின்ன வயசிலேயே உங்களை விட்டு உழைக்கப் பழக்கிட்டாங்க உங்கட ஆத்த அப்பன்கள்.''





RangaRakes Tamilnavarasam.com

''ஐயா! ஐயா! அவங்க இருந்தா நாங்க அலையிறமா இப்படி? எல்லாமே அழிஞ்சுதானய்யா அலைஞ்சு வாறன் இங்க'' என்று வேதனைச் சுமைகளை கூறும் போது அவன் கன்னங்களில் கண்ணீர் பனித்து நின்றது.

''ஓகோ! நீ வெளியூர் அகதியா? கதைக்க நேரமில்லை, இந்தா தண்ணியை குடு கணபதி... கெதியா கேற்றையும் பூட்டிற்று வா'' என வீட்டுக் கதவிற்கு தாழ்ப்பாடு போட்ட சத்தம் அவன் மனத்தை நெருடியது.

''கணபதி அண்ணே! ஐயாட்ட சொல்லுங்க. அண்ணே பசி தாங்கேல்லயெண்டு.''

வீட்டு யன்னல் வழியாக முதலியார் முத்துலிங்கத்தின் குரல் ஒலித்தது. ''டே... கணபதி! ஜிம்மிக்கு சாப்பாடு வைச்சியா... அது என்ன, ஒரு மாதிரி நிக்குது. பின்னேரம் ஒருக்கா டொக்டரிட்ட சொல்லி மருந்து எடு. வெக்கை காலம் இப்ப. கவனமாப் பார்க்க வேணும்.'' அங்கே கண பதியோ அவனை நெருங்கி, ''தம்பி! தம்பி! என்ன பேரு உனக்கு? உன் குடும்பம் எங்கே?'' எனக் கேட்ட கணபதி யின் குரலுக்கு...

''அதுதான் அண்ண சொன்னனே, எல்லாம் அழிஞ் சுது எண்டு. இப்ப தனிய அலையிற அகதி ஆயிற்றன். இப்ப நம்ம ஊருக்குப் போக ஏலாது. ஐஞ்சாம் வகுப்பு படிச்சனான். பள்ளியையும் கொளுத்தி உடைச்சுப் போட் டானுங்க. எல்லொரும் ஓடுறாங்க எண்டு நானும் ஓடி வந் திட்டன். இப்ப தனிய அலையிறன். 'அரசரெத்தினம்' எனறு பேர் வைச்சாங்க ஆனா 'அரசு' எண்டுதான் கூப்பிடு வாங்க. அந்த அரசால, இந்த அரசு படிப்பும் இல்லாம பட்டினியா அலையுது.'' எனத் தன் சோகச் சுவடுகளை சொன்ன போது கணபதியின் முகத்தில் கண்ணீர் முட்டி நிறைந்தது.



''தம்பி கலங்காத! நானும் உன் நிலைதான். இஞ்ச கூட பெரிய வீட்டைப் பாத்தாயா? இங்கயும் அகதி போல் தான் எங்க முதலாளியும் வாழுறாரு. பள்ளிப் பருவத்தில் அலையிறாய் படிக்க வழியில்லாமல். ஆனா இவங்க படிச் சுப் போட்டு பணத்தைச் சேர்க்க பிள்ளையளை அகதியாய் வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டு, வீட்டைப் பாக்க அவரும், அவரைப் பாக்க நானும், நம்மைப் பாக்க நாயும் இது தான் எங்கட உலகம். தினமும் வாசலைப் பாத்து வாழ்க்கை போகுது.'' என்ற போது அந்த மணியோசை அவர்கள் பேச்சை இடை நிறுத்த, தபால்காரன் விமானக் கடிதத்தை நீட்டினான்.

மணி ஓசை கேட்ட பெரிய மனிதரின் மனக்கதவும் திறந் தது. எதையோ எதிர்பார்த்திருக்கும் அவசரம் அவரது செயல்களில் வெளிப்பட்டது. ''ஐயா! கடிதம் வந்திருக்கு தம்பியின்ர போல'' என்று கணபதி நீட்டும் போது அவரது கண்களோ வாசலில் நின்ற அரசு பக்கம் நோட்டம் விட்டது.

''என்ன...... என்ன நடக்குது? என்னும் போகல்லையா அவன். அவனோடு என்ன கதைக்கிறாய்? அகதிகளை சும்மா விட்டா போகமாட்டாங்க. நாயை அவுட்டு சாப்பாட்டைப் போட அவன் தானாய் போவான். கணபதி! சும்மா அவனோட அலட்டாம வந்து வேலையைப் பார்'' என்று கடினக் குரலுடன் கடிந்து கொண்டு சாரி மனையில் அந்த மலை போன்ற உடலைச் சாய்த்து கடிதத் தில் தன் உறவைத் தரிசிக்க முனைந்தார் முதலாளி முத்து லிங்கம்.

அன்பின் அப்பா!

இங்கு எங்கள் படிப்புக்கு ஏற்ற வேலையில்லை என அடுத்த நாட்டிற்கு தலை மாத்தி போக முயற்சித்தேன். அங்கும் பல சோதனைகள். அதில பிடியட்டு இப்போ அகதி முகாமில் இருக்கிறேன். தயவு செய்து, எமது வீடுவாசல்



RangaRakes
Tamilnavarasam.com

அழிந்ததாகவும், அகதியாய் இருப்பதாகவும் படங்கள் எடுத்து அங்குள்ள பெரியவர்களிடம் கடிதம் வாங்கி உடன் அனுப்பவும். இல்லையேல் உடன் திருப்பி அனுப்பி விடுவார்கள். சண்டை நடக்கும் இடங்களைக் குறித்து கடிதமும், பேப்பர் கட்டிங்கும் அனுப்பவும்.

அதைக் காட்டி அகதிப் பணமும், உதவியும் எடுக்க அவை உடன் தேவை. இப்போ முன்பு மாதிரி சுலபமில்லை அகதியாய் இருக்க. ஆதலால் கணபதியின் வீட்டுப் பக்கம் உள்ள இடிந்த வீட்டில் ஒரு படம் எடுத்து அனுப்பவும். இங்கு பெரும் கஸ்ரமாய் இருக்கு. யாருக்கும் என் நிலையினை தெரிவிக்க வேண்டாம். மரக்கறி விற்கிற ராசனின் மகனும் இந்த முகாமில் தான நிற்கிறான். நான் முகம் காட்டவில்லை. எப்படி உங்கள் சுகம்? ஜிம்மியைக் கவனமாகப் பார்க்கவும். அடுத்த கடிதத்தில் அகதிக்கான அத்தாட்சிகளையும் அங்குள்ள அழிவுகளையும் விபரமாகத் தரவும்.

கொழும்பில் படிக்கச் சென்ற தம்பி சுரேசும் கடிதம் போட்டான். அங்கே வெளியில் செல்ல முடியாதாம். இங்கும் அவனை எடுக்க வழியில்லை. அவனும் பயந்து பயந்து தானாம் இருக்கிறான். பரீட்சை இல்லாவிட்டாலும் நிம்மதியா இருந்திருப்பான். அங்கு இப்போதும் வீடு எடுக்க இயலாமல் அலைகிறான். உங்களோடு இருந்தாலும் ரியூசன் எதுவும் எடுத்து படித்திருப்பான். எல்லா வசதியும் இருந்தும் இப்போ அகதியா அலைகிறதை நினைக்க எனக்கு பெரும் கவலையாய் இருக்கு. இங்கே காம்பில் பல தொற்றுநோய்கள். எனக்கும் பொக்களிப்பான் வந்தது, வருத்தத்தில் தான் இதுவரை கடிதம் போடவில்லை. இப்போ நல்ல சுகம். உங்கள் சுகத்தையும், வீட்டையும் பார்த்துக் கொள்ளுங்கள். உடன் கடிதம் போடவும்.

இப்படிக்கு உங்கள் மகன்
எம். சந்திரன்



கொழும்புக் கடிதம் வராத கவலை. வெளிநாட்டுக் கடிதம் மேலும் தாக்கத்தைக் கொடுத்த போதுதான் முத்துலிங்கத்தின் மனப்பாரமும், உடல்பாரமும் சேர்ந்து தலை இறுகிறுத்தது.

''ஐயா! தேத்தண்ணி குடியுங்க, நேரமாச்சு'' என்ற கணபதியின் குரல் கேட்டு விழித்துக் கொண்டார் முத்துலிங்கம். அவரது வயதைத் தாண்டிய தோற்றமும், பனித்துளிகள் பட்ட உடல் போல் வேர்வை முத்துக்களும் அவரை ஒருமுறை சுயநிலைக்கு ஈர்த்துக் கொண்டன.

''என்ன கணபதி! எத்தனை மணி இப்ப?''

''ஐயா! மூன்று மணியாச்சு. என் நல்லாத் தூங்கிட்டீங்களா? மகன் கடிதம் வந்த சந்தோஷமாக்கும்!''

''என்ன கணபதி சொல்லுறாய்? மத்தியானம் சாப்பிடாம படுத்திட்டனா? நித்திரையே வரவில்லை. மயக்கமாயிருந்திட்டன் பாத்தியா?''

''என் ஐயா! ஏன் என்ன நடந்தது? தம்பி என்னவாம்?''

''எல்லாருக்கும் அளந்த அளவுதான் கிடைக்கும் பார். எத்தின வசதி இருந்தும் இக்கரைக்கு அக்கரை பச்சையென்று அனுப்பிப் போட்டு அமைதி இல்லாம அலைய வேண்டி இருக்கு...''

''ஐயா! கவலைப்படாதையுங்கோ. வெளிநாடு சென்றா என்ன யோசினை? உழைச்சு சேர்க்கட்டன் அங்க. வீட்டை, காரை வேண்டி அங்கயே குடித்தனமும் நடத்தட்டன். தம்பி சுரேசும் கொழும்பில ஏ. எல். படிச்சுட்டு அவரும் அதால போனா என்ன குறை? இஞ்ச நாங்க வீட்டைப் பாப்பம்.''

''கணபதி! அதுதானடா எல்லாற்ற எண்ணமும், ஆனா இத்தின வசதிகளோட சொந்த மண்ணில் சோறு உண்டு



RangaRakes
Tamilnavarasam.com

தூங்காமல் அங்க அகதியா அலைய ஆரு உதவுவினம்? படிச்சு பட்டம் பெற்று என்ன பயன்? எல்லாப் படிப்பும் அங்க அகதிப் பணத்தை வேண்டி நிற்க, இஞ்ச படிப்பும் இல்லாம அலையுதுகள், இதுகளை படிப்பிச்சிருந்தா இந்த மண்ணில எத்திணை பேரை உருவாக்கியிருக்குங்கள். இப்ப இதுகள் படுறதைக் காட்டித்தானே அதுகளும் வாழ முடியும் என்பதை நினைக்க நினைக்க தலையைச் சுத்துது.'' என உண்மையை உணர்ந்தவராய் வார்த்தையை கொட்டித் தீர்த்தார் முத்துலிங்கம். இந்த வீடு வாசலைக் காத்துத் தான் என்ன பயன்.'' என முத்துலிங்கம் உரைத்தபோது, ''தனக்கு வந்தாத்தான் தெரியும் தலையிடி காய்ச்சல்'' என கணபதி எண்ணியபடி சொன்னான்.

''ஐயா! அப்ப இஞ்ச பிரச்சினை முடிஞ்சா அவையள் இஞ்சையும் அகதியாய்த்தான் வருவினமோ... இதென்ன வெக்கக்கேடு இனம், மொழி, நாடு என்ற உணர்வில்லாத அகதிப் பரம்பரையாய் எல்லோ அலையப் போகினம் பாவம்'' என்ற கணபதியின் வார்த்தைகள் முதலாளி முத்து லிங்கத்திற்கு மனதைத் தைத்தது.

''அங்க உழைச்சு, அங்க வீடு, கார் வேண்டி அது இங்க வருமே? எல்லாமே உழைச்சு உடம்பை கெடுத்திட்டு இங்க அகதியா, வாறதிலும் பார்க்க, இங்க இருக்கிறது கள் ஏதோ கஞ்சியை, தண்ணியைக் குடிச்சு திரியிறத பாத்தா எவ்வளவு நிம்மதி என்று இருக்கு. நாம விட்டிட்டு ஏங்க வேண்டி இருக்கு.'' என சலிப்போடு உரைத்தார் முதலாளி முத்துலிங்கம்.

''ஐயா! யோசியாதையுங்கோ. அவையள் நல்லா இருக்க ஒரு பொங்கல் ஒன்றை சன்னிதியானுக்குச் செய்வம்'' கணபதியின் யோசினை முத்துலிங்கத்தாருக்கு மனதை உறுத்தியது.

''முத்தண்ணே...! மூத்தண்ணே...! என்ற குரல்கேட்டு கணபதியும் முத்துலிங்கத்தாரும் வாசல் நோக்கிச் சென்ற போது அங்கு மரக்கறி விற்கும் ராசன் எல்லாம் அறிந்தவனாய் சொன்னான்.

''கொழும்பால இப்பதான் வாறன் அண்ணே! தம்பியோட போனில கதைக்க போனனான். உங்கட மகனும் அங்க என்ர மகனோட அந்த முகாமில்தான் இருக்கிறாராம். சரியான கஸ்ரமாம். திரும்பி விடுவினம் போல கிடக்கு. கொழும்பிலயும் எல்லாரையும் விசாரிக்கக்கொண்டு போனாங்க. அதில உங்கட சுபேசும் போச்சுது எண்டு இருந்த வீட்டுக்காரர் சொல்லிச்சினம். உங்களிட்ட சொல்லிவிடச் சொல்லி. எதுக்கும் ஒருக்கா யாரையும் பிடிச்சு எடுக்கப் பாருங்கோ. இரண்டு இரண்டரை செலவாகும் எண்டினம். அப்ப நான் வாறன் அண்ணே!'' என பதிலை எதிர்பாராது ஒரே மூச்சில் சொல்லிப் புறப்பட்டான் ராசன்.

இந்த புதிய பரம்பரையை எண்ணி ஏக்கப் பெருமூச்சை விட்டவரின் வாசலில் அகதியாக நிற்கும் அரசின் மூகம் ஏதோதோ கவலைகளைக் கோடிட்டுக் காட்டியது. ●

ஆடி 1991





RangaRakes

Tamilnavarasam.com

# சோறும் சுதந்திரமும்

நகரம் கலகலப்பாக இருந்தது. எல்லோரும் ஏதோ அவசரமாக தமது கடமைகளை கவனித்த வண்ணம் செல்லுகையில், தேவன் மட்டும் தனது வீட்டின் கடிதமொன்றை படிப்பதற்காக தேனீர் கடையின் ஒதுக்குப் புறத்தை நாடினான்.

அவனது வீட்டார் யாவரும் கொழும்பு சென்று சொற்ப நாட்கள் தான். அங்குள்ள நிலைகளையும், அவர்களின் மன ஆதங்கத்தையும் எழுத்துருவில் தேவனிற்குக் கொடுத்தனுப்பி இருந்தார்கள். அந்தக் கடிதம் பல சோதனைகளைத் தாண்டி அவன் கைக்கு எட்டியதும் ஒரு சாதனைதான்.

ஊரடங்கு அறிவிப்போடு பயண நெருக்கடிகளைத் தாண்டி யாரும் கடிதம் வேண்டி வரத் தயங்குவதால் எதனையும் உடன் அறிய முடியாது தயங்கும் உள்ளங்களுடன் தேவனும் ஒருவனாக ஏங்கி இருந்தான்.

ஊரடங்கு உத்தரவுக்குள்ளும் யாழ் நகரம் தனது அன்றாட நிகழ்வுகளைக் கண்டு கொண்டே இருப்பது காலம் அறிந்த கதையாகி விட்டது. புறப்பட்டு ஒருவாரம் கடந்து வந்த ஒருவரின் வருகைதான் அவனுக்கு நகரில் கிடைத்த அந்தக் கடிதம். உடன் படித்திட வேண்டும் என்ற ஆவல் அவனை அறியாமலே அவசரப்படுத்தியது.

தேநீர் கடையில் பலரும் முண்டியடித்துக் காலை உணவை ருசிபார்த்திருக்க தேவனும் வடை, தேநீர் என சொல்லி விட்டு தன் உறவைத் தரிசிக்க அந்தக் கடிதத்தைப் பிரித்தான். ‘வள், வள்’ என்ற சத்தமும், எச்சிலை போடுபவர்களின் முண்டியடிப்பும், அவன் இருக்கைப் பக்கமாகவே இருந்ததால் அச்சூழல் அவனுக்கு அமைதியைத் தரவில்லை. இருந்தும் தினமும் உணவுக்காக வந்து பழக்கப்பட்டு விட்டதால் பொறுத்துக் கொண்டு எட்டிப் பார்த்தான். தெருநாய்கள் ஏதோ முண்டியடித்து போடுவதை எல்லாம் போட்டி போட்டு கிளறுவதிலும், மெலியாரை வலியோர் வதைப்பது போலவும், தமது பலப்பரீட்சைக்கு நல்ல களமாக பயன்படுத்திக் கொண்டு இருந்தன.

தோசை, இட்லி, இடியப்பம், சுவையூட்டும் தின்பண்டங்களின் எச்சிலைகள் யாவும் அந்நாய்கள் மேல் விழுந்து சிதறுவது போட்டிக்கு விறுவிறுப்பைக் கொடுத்தது. அந்த நிகழ்வுகளை ஒருகணம் நிறுத்தி கடிதத்தில் கவனம் செலுத்தியபோது அவனுக்கான தேனீரும், வடையும் மேசைக்கு வந்தது. கடிதத்தைப் பிரித்துக் கொண்டே தேனீரையும் சுவைத்துக் கொண்டான்.





RangaRakes

Tamilnavarasam.com

அன்பு மகன் தேவன்!

உன்னைப் பிரிந்து நாங்கள் வந்தது கவலைதான். வெகு விரைவில் நீயும் வந்திடவேணும் என்பதே எமது ஆவல். இங்கு அன்ரி வீட்டில் இருந்து நாங்கள் வெளியில் செல்வது மிகவும் குறைவு. இங்கு சாப்பாட்டுக்கு குறைவில்லை. எதைச் சாப்பிடுவது எதை விடுவது என்று தெரியாது இங்கு நாம் திணறுகிறோம். அங்கு உன்னை நினைக்கையில்தான் கவலையாக உள்ளது. இங்கு வீட்டுக்குள்ளே தான் எல்லோர் பொழுதும் செல்கிறது. ரீ. வி., றேடியோ, பேப்பர்களில் அங்குள்ள நிலைமைகளை அறிகிறோம். வேறு யாரையும் சந்திக்க முடிவதில்லை. காரணம், எவரும் இப்போ இங்கு வெளியில் செல்வதில்லை. பலத்த சோதனை. வீட்டில் எமக்கு எதுவித குறையும் இல்லை. நீதான் அங்கு ஊரை சுற்றி வருவாயே. ஏதும் செய்திகள் இருந்தால் எழுது. முடிந்தால் நீயும் வந்து இங்கு இருக்கலாம். ஆனால் அங்கு போல் சுத்தித் திரியத்தான் முடியாது.

அம்மாவின் கடிதத்துடன் தங்கை சுமதியும் எழுதியிருந்தாள்.

அன்பின் அண்ணா!

படிக்க எண்டு வந்தோம். படும்பாடு! தின்பதும், குடிப்பதும் தான் வாழ்க்கை. இங்கு வேறு எதுவும் செய்ய முடியாது வீதியில் சென்றாலும் விசாரணை என்பதால் நாமோ சிறைவாழ்க்கையில் தான் இருக்கிறோம். இங்கு அடிமை வாழ்வைத்தான் படிக்கிறேன். இதை உணர்ந்தால் நீ வரலாம். அடக்கப்பட்டு, அடைக்கப்பட்ட வாழ்க்கையை விட உவ்விடம் வரவேண்டும் போலுள்ளது. இருக்கும் வீட்டாருக்கும் எம்மால் சிரமம் கொடுத்து, எத்தனை காலம்தான் இப்படி வாழ்வது. எமது வாழ்வில் எத்தனை காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல. எப்படி வாழ்ந்தோம் என்பது தானே முக்கியம். 'சுதந்திரம் இங்கு சோத்துக்குத்தானா' என எண்ணி வேதனைப்படுகின்றேன். இதை விட உவ்விடம் உள்ள நெருக்கடி பெரிதல்ல. அதில் ஓர் சுகமும் உண்டு. நாமும் பங்களித்தோம் என்ற மன நிறைவும் உண்டு அல்லவா? விரைவாக உவ்விடம் வர ஆவலாய் உள்ளது.

இப்படிக்கு
உன் தங்கை
சுமதி

கடிதத்தில் மூழ்கியிருந்த தேவனிற்கு கடைக்காரனின் பில் அவனை மீண்டும் இருக்கும் இடத்தை ஞாபகப்படுத்தியது. 'அடடா என்ன சத்தம் நாய்கள் தொல்லையாய் இருக்கிறதே' என்று சத்தம் வந்த திசையை நோக்கியவனிற்கு ஓர் உண்மை புலப்பட்டது. எச்சிலைக்கு போட்டி போட்ட தெரு நாய்கள் யாவையும் கூட்டிற்குள் தள்ளிக்கொண்டிருந்த நாய் பிடி காரனின் தோற்றத்தைப் பார்த்தான். அமைதியைத் தேடி அலைவோருக்கு அங்கும் இதே கதிதானா? என எம்மவரை ஒரு கணம் நினைக்கையில் தேவனின் கண்கள் பனித்தன.

ஜனவரி 1992





RangaRakes

Tamilnavarasam.com

# காலம்

ஆலய மணி ஓசை கேட்டதும் வீட்டில் ஒரே இயந்திர மயமான செயல்கள் நடைபெற்றுக் கொண்டு இருப்பதை அவதானித்தபடி சாய்மனைக் கதிரையில் தன் உடலைச் சாய்த்து காலைத் தேனீருக்காக காத்திருந்தார் பரமசிவம்.

மனைவி கமலமோ அர்ச்சனைத் தட்டினை எடுத்து வைத்துவிட்டு, படுக்கை அறையிலேயே பரீட்சைக்கான படிப்பில் மூழ்கி இருக்கும் மகள் தர்சினியை நோட்டம் விட்டபடி, காலைத் தேனீருக்கான ஆயத்தங்களை செய்து கொண்டு அந்தரப்படுவதும், மகன் தேவன் தன் மிதிவண்டிக்கு காற்றடித்து ரீயூசனுக்கு புறப்படத் தயாராவதும் அந்த காலை மணி ஓசை ஒலி கேட்டுத்தான்.



''தம்பி! ரீயூசனால வரேக்க ஒருக்கா பெரியப்பா எப்ப கொழும்புக்கு போறார் எண்டு கேட்டு வா கடிதம் கொடுத்து விடுவம்'' என்றாள் கமலம்.

''என்ன அவசரம் இப்ப அம்மா. சோதினை முடியேல்லைத்தானே!'' என்றபடி மிதிவண்டியை வீதிக்கு உருட்டினான்.

''திருவிழாவுக்கு வாறவயள் இந்த முறை தேருக்கு வந்தாலும் அவையளோட போயிடலாம் எல்லோ?''

''ஏன் கமலம் இப்ப என்ன அவசரம். பிள்ளையள் இங்க படிச்சு நிம்மதியா இருக்க உனக்குப் பிடிக்கேல்லையோ.'' என்றார் பரமசிவம்.

''சும்மா இருங்கோ! உங்களுக்கு நாட்டு நிலை ஒண்டும் தெரியாது. உங்கட காலம் வேற. இப்ப எவ்வளவு படிக்க வேணும். இது என்ன அந்தக் காலம் மாதிரியோ?''

இவை தினமும் ஏதோ ஒரு சாட்டுடன் தொடங்கும் தர்க்க வாதங்கள் தான். இதனிடையே மகள் தரிசினி பேச்சுக்களை இடைமறித்தவளாய், ''அப்பா! ஒல்லாந்தரா போர்த்துக்கேயரா முதல்ல வந்தாங்க இங்க? சங்கிலியன் எப்ப அப்பா அரசாண்டான், இது புரியுதில்லை அப்பா எனக்கு.''

''தரிசி! இவர் படிப்பிச்சது எல்லாம் இப்ப மாறிப் போச்சுது. புதுசு புதிசா படிப்பிக்கிறவயளிட்ட கேட்டுப் படி பிள்ளை. அதுக்கும் ரீயூசன் எடன். இதுக்குப் போய் அப்பாட்டக் கேட்டு உனக்கு விளங்கவா போகுது?''

''அம்மா! எது மாறினாலும் சரித்திரம் எப்பவும் ஒண்டுதான் அம்மா.''



RangaRakes
Tamilnavarasam.com

''அப்படிச் சொல்லு மகள். வைத்தியம் மாறினாலும் நடந்த சரித்திரம் மாறாது. இது தெரியாம அம்மா வைத்தியமா எல்லோ கதைக்கிறா'' என்றார் பரமசிவம்.

''அப்பாவும் பிள்ளையும் சேர்ந்திட்டியள். இனி என்ன, நான் வைத்தியம் மாதிரித்தான் தெரியும். உங்களோட கதைச்சுக் கொண்டிருந்தா, சுவாமி சுத்தி முடிஞ்சிடும். தம்பி வந்தா சாப்பாடு மூடி இருக்கு, எடுத்துக் கொடுங்க.'' என்றவாறு அவசரத்துடன் வாசல் கதவை தாண்டிச் சென்றாள் கமலம்.

''தரிசி வா பிள்ளை கொஞ்சம் படிப்பம், நான் சொல்லுற கதைகள் பழைய கதைகள்தான். ஆனா அதைப் படிச்சாத்தான் உனக்கு இப்ப படிக்கிறது மட்டுமல்ல இப்ப நடக்கிறதும் புரியும்.''

''அப்பா! எல்லாம் எடுத்திற்று வாறன். கொஞ்சம் பொறுங்க.'' என்றவளாய் தன் திருப்பள்ளி எழுச்சியை முடித்து, அப்பாவிடம் பாடம் கற்கச் சென்றாள் தர்சினி.

இவை அவளுக்கு புதிய அனுபவத்தைக் கொடுத்தது. காரணம் மனனம் செய்து, பரீட்சை வரை காத்து, பரீட்சையுடன் முடிந்தது என மூடி வைக்கும் படிப்பைப் போல் அல்லாமல் கதைப்பாங்கில் பழைய தலைமுறை வாழ்க்கையை புரிந்தவளாய், புதிய தலைமுறை போராட்டத்தின் சாரத்தையும் புரிய வைத்தது.

''போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என அந்நிய நாட்டில் இருந்து நம்மை ஆள வந்தது எம் மீது கொண்ட பற்றுதலில் அல்ல மகள். எம்மிடம் உள்ள வளங்களைச் சுரண்டி, தமது கலாச்சாரம், பண்பாடுகளைப் புகுத்தினார்கள்.



எம்மை அடிமை வாழ்விற்குள் பழக்கப்படுத்தி அதனால் தமது ஆட்சியின் பரவலாக்கத்தை எமது வரிப்பணத்தைக் கொண்டே எம்மவரின் துணையோடு எம்மை ஆண்டு வந்தார்கள்.''

''அப்படியென்றால் அப்பா! இவற்றோடு இசைந்து போனார்கள் தானே எம்நாட்டு மக்கள். அதனால் எந்தப் பிரச்சினைகளும் எழவில்லைத்தானே!''

''அவர்கள் ஆட்சியிலும் பல போராட்டங்கள், காட்டிக் கொடுப்புகள், ஆட்சி மாற்றங்களும் இருந்ததுதான் நாம் பெருமைப்படும் வெடியரசன், கண்டியரசன், பண்டார வன்னியன் என்று சொல்லிக்கொள்ளும் அளவிற்கு இன்றைய கால ஆட்சி மாற்றத்தையும் தரிசிக்கத் தயங்கி எங்களிற் சிலர் வேற்று நாட்டவர் போல பாடப்புத்தகத்திலயெல்லோ வெளியில இருந்து படிக்கத் திரியினம்.''

''அப்பா! ஆட்சி மாற்றங்கள் வந்து இறுதியாக ஆங்கிலேயரின் ஆட்சியின் பின்தானே இலங்கை சுதந்திரமே பெற்றது.'' என்றாள் தரிசினி.

''இரத்தம் சிந்தாமல் இலங்கை சுதந்திரம் பெறவும் எங்கட தமிழர் பங்குதான் அதிகம் பிள்ளை. அந்த நேரம் எங்கட ஆக்கள் நடந்து கொண்ட விதம் கண்டு சிங்களவரோ தேரில் ஏற்றி பவனி செய்து தெய்வம் போல மதிச்சாங்கள்.''

''இது எல்லாம் நீங்கள் படிச்சதை விட நேர்ல் அநுபவிச்சதுகள் அதிகமா இருக்கும். என்னப்பா!''

''இவர்கள் ஆண்ட கால சரித்திரங்களை கற்று வந்ததோடு அதை நேரில் காணக்கூடியதாக இருந்ததை யிட்டுப் பெருமைப்படுறம். அப்பவெல்லாம் அந்த வெள்ளைக்காரற்ற அரச உத்தியோகத்தர் தானே நாங்கள். அதிகமாகப் படிக்கவும், உயர் பதவி வகிக்கவும் அதனால் எங்கட பதவி

கொழும்பு தமிழ்ச் சங்கம்



RangaRakes
Tamilnavarasam.com

களைக் காக்க படிச்சதை வைத்து முயன்றோமே யொழிய, எங்கட மொழியை இனத்தைப் பற்றிச் சிந்திக்க எவரும் முயலாததாலே தானே இப்படி அலைய வேண்டி வந்தது பிள்ளை.

எங்கட்ட இருந்த பதவிகள், தகுதிகள், படிப்புக்கள் எல்லாமே பின்வரும் காலத்தில் பறிக்கப்படும் போதுதான் உண்மையை உணர முடிஞ்சுது. அந்த நேரம் சற்றுச் சிந்தித்திருந்தால் அப்பவே ஒரு தீர்வை வைத்திருக்கலாம். இப்ப இது எங்கட சந்ததிக்கே ஒரு சவாலாய்ப் போய்விட்டது என்பதை நினைக்க பெரும் வேதனைதான் பிள்ளை.''

''அப்பா! காலம் கடந்த பின் ஞானம் பிறந்து என்ன பயன்? ஏன் அப்பா? சுதந்திரத்திற்குப் பிறகு ஒன்றாய் இருக்கிற நேரம் அவயளோட கதைச்சு பேசித் தீர்த்திருக்கலாம் தானே!'' என்றாள் தரிசினி.

''ஆட்சிக்குப் போகேக்க அப்படித்தான் சொல்லிப் போறது. அவையளும் பேச்சுவார்த்தை எண்டு காலம் கடத்திப் போட்டு, காலம் செல்லச் செல்ல ஏற்றுக் கொள்ளாத நிலைகளும், சில சலுகைகள் எண்டு சொல்லி எங்கட உரிமைகளை விட்டுக் கொடுத்ததும், அந்த ஏமாற்றத்தை உணர்ந்துதானே இப்படியொரு பெருமாற்றமே ஏற்பட்டது.

இனிவரும் சரித்திரத்தையே புதிதா எழுதிற இந்தப் போராட்டம் உங்கட காலத்தில நேர பார்க்க மட்டுமில்ல பிள்ளை பங்கேற்கவுமெல்லோ சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. இதை உணராம எங்கோ தேசத்திற்குச் சென்று இந்தச் சரித்திரத்தை சிலர் புத்தகத்தில் படிக்க முனையினம். இதை நினைக்க, ''நெஞ்சு பொறுக்குதில்லையே'' என்ற பாரதியின் பாட்டுத்தான் நினைவிற்கு வருகுது.'' என்று தம்மை மறந்து கற்றுக் கொண்டிருந்தவர்களுக்கு கதவுச் சத்தம் பலமாகத் தட்டப்பட்டது காதில் விழவில்லைத்தான்.



அம்மாவின் குரலும் அவசரப்படுத்த தரிசினி ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். ''என்ன செய்யிறியள்? எத்தனை தரம் கதவைத் தட்டுறது. கூப்பிட்ட குரலும் கேக்கல்லையோ உங்களுக்கு?'' என்றவாறு கோடை வெயிலில் தீக்குளித்தவள் போல் கோபத்துடன் கத்தினாள் கமலம்.

''ஏனம்மா கத்திறியள்? அப்பாவோட படிச்சுக்கொண்டு தானே இருந்தனான்'' என்றாள் தரிசினி.

''என்ன கமலம்! என்ன அவசரம்? ஏன் இப்படிப் பதட்டப் படுகிறீர்? ஊரில ஏதும் வித்தியாசமாய் நடந்ததோ......'' என்றவருக்கு,

''எங்கட அவசரம் உங்களுக்கெங்க விளங்கப் போகுது. வீட்டுக்க இருந்தா வெளியில நடக்கிறதுகள் உங்களுக்குத் தெரியுமா?''

''ஏன் கமலம் சும்மா கத்தி ஊரையே கூப்பிடுறீர். என்ன நடந்ததெண்டு சொல்லுமன்?''

''உங்களிட்ட சொல்லிக் கொண்டிருக்க இது நேரமோ? வெளியிலை போயெல்லோ பாத்திருக்க வேணும். வீட்டுக்க இருந்து கொண்டு அப்பாவும் பிள்ளையும் பழங்கதை சொல்லிக் கொண்டிருக்கிறியள்.''

''கமலம்! அதுதானே விடியவே போயிற்றீர்தானே கோயிலுக்கு.''

நான் மட்டும் போய் என்ன செய்யிறது. கோயில் தேர் இழுக்க ஆளில்லாம அங்க வடக்கு வீதியில எல்லோ வந்து நிக்குது. எங்க தம்பியும் இன்னும் வரேல்லையோ?'', என கோபக் கனலைக் கக்கினாள் கமலம்.



RangaRakes
Tamilnavarasam.com

''மகனுக்கு இன்று மத்தியானம் வரைக்கும் ரியூசன் எல்லோ கமலம்.'' என்றார் பரமசிவம்.

''அவனும் இல்லை, நீங்களாவது தரிசினியோட கோயிலுக்கு வெளிக்கிட்டிருக்கக் கூடாதோ? இந்த நேரத்தில ஒரு அக்கறை இல்லாம படிச்சு கிளிக்கிறியள். எனகாலத்துக்குப் பிறகு இந்த வருஷம் தேர் இழுக்கிறதாக முடிவுசெய்தா இண்டைக்கு எண்டு வெளியிலை நிக்கிறதுகளும் வரேல்லை. இருந்த பெடி பெட்டையளும் வெளியில போயிற்றுதுகள்? இருக்கிறதுகளும் ரியூசன், இறிக்சற் எண்டதோட வீட்டுக்கையும் அடைஞ்சு கிடந்தா, தேர்வடம் பிடிக்க யார் வருவினம். வாங்களன் எல்லாருமா பிடிப்பம்'' என்று அவசரப் படுத்தினாள் கமலம்.

''பரமசிவம் அண்ணே! என்ன விடியிற நேரம் முதல் கலகலப்பா இருக்கிறியள்?'' என்றவாறு அடுத்த வீட்டு பென்சனியர் கணபதிப்பிள்ளை ஊர்ப்புதினம் அறிய உள்ளே புகுந்து கொண்டார்.

''கோயில் தேருக்கு போகாம இருக்கிறியளே! திருவிழாக் காரர் எல்லோ நீங்க...... நீங்களே இப்படி நிண்டா தேர் எப்படி இழுப்பினம் கணபதிப்பிள்ளை'' என்றார் பரமசிவம்.

''என்ன அண்ணே! விசயம் புரியாம கதைக்கிறியள். திருவிழாக்காரர் எண்டபடியாத்தானே இவ்வளவு செலவில அண்டைக்கு அன்னதானம் செய்தம். பிள்ளையள் கோயில் செலவுக்கும் அனுப்பிச்சுதுகள்.

செலவிற்கும் கொடுத்தம். நானும் போய்விடலாம் எண்டா வீடு பாக்க ஒருத்தரும் இல்லையே! அதால...'' என பென்சனியர் கணபதிப்பிள்ளை சாட்டு சொன்னார்.

''என்ன சாட்டுச் சொல்லுறியள்! இப்படியே எல்லாரும் சொன்னா தேர் வடம் பிடிக்க யார் வருவினம். கொடுத்த காசால தேர் இழுபடுமோ? நாங்களும் ஒரு கை பிடிப்பம் வாங்களன்'' என துணைக்கு அழைத்தார் பரமசிவம்.



''நாங்கள் போறகாலம் வந்திட்டு. இப்ப உள்ள இளசுகள் எல்லோ பெலசாலிகள். அதுகள் இழுத்து விடுங்கள் தானே!'' என ஒதுங்க முற்பட்டார் பென்சனியர் கணபதிப் பிள்ளை.

''இது சரியோ! நீர் கோயில் சபையிலையும், ஊர் கூட்டங்களிலயும் இருந்து கொண்டு, உங்கட வீட்டு இளசுகளை தூரத்தில அனுப்பிப் போட்டு இளசுகளைப் பற்றிப் பேசுறீரே! ஏன் நாங்கள் கூட தூரத்தில நிண்டு பார்க்காம வாரும் ஒரு கை பிடிப்பம்.'' என அழைத்தார் பரமசிவம்.

''என்னங்க! கதைச்சுக் கொண்டிருக்க நேரமோ இது. பத்து மணியாப் போச்செல்லோ.'' என கோயிலுக்கே மீண்டும் செல்லப் புறப்பட்டாள் கமலம்.

தரிசினி அவசர அவசரமாக அம்மாவின் குரலிற்குக் காத்திராமல் வாசலை அடைந்து விட்டாள்.

''கதவை மூடிற்று கெதியா வாங்கோ!'' என தரிசினியைக் கூட்டிக் கொண்டு கோயிலுக்கு விரைந்தாள்.

ஆலயத் திருவிழாகளை கட்டி, அவ்வூரே விழாக் கோலம் பூண்டிருப்பது கண்டு உள்ளூர ஓர் மகிழ்வு தான். பல பாகத்திலுமிருந்து வந்து சேர்ந்த வண்ணம் காவடிகள், மேளச்சத்தம், கடைத் தெருக்களில் கூடிநின்று நெருக்குப்படும் சனக்கூட்டம், வெளிவீதி எங்கும் கச்சேரிகள் கலைநிகழ்ச்சிகள் மனநெருக்கத்தைக் களையவும், புதினம் பார்க்கவும், தங்கள் தேவைகளை எண்ணி வரம் கேட்கவும், முண்டியடிக்கும் கூட்டத்தோடு புகுந்து விட்ட பரமசிவத்தோடு பென்சனியர் கணபதிக்கும் ஓர் மனத்தென்



RangaRakes
Tamilnavarasam.com

பும் உள்ளுணர்வின் உந்தலும் பலமாகக் கொண்டு வடக்கு வீதித் தேரடிக்குச் சென்றதே அவர்களுக்கு ஒரு சாதனை யாகப் பட்டது.

''என்ன கணபதி! உமக்குக் கிடைச்ச சந்தர்ப்பம் உமது பிள்ளைகளுக்கு கிடைக்கேல்லைத்தானே. நல்ல காலம் இங்க இருந்து கொண்டே நாங்கள் இதுகளில பங்கு பற்றாம விட்டா எங்களுக்கும் அவங்களுக்கும் என்ன வித்தியாசம்?'' என தன் மனக் குமுறலை சொல்லிக் கொண்டார் பரமசிவம்.

''பரமசிவண்ணே! தம்பி கடிதம் போட்டவன்தான். இந்தத் திருவிழாவை ஒருக்கா படம் எடுத்து அனுப்பச் சொல்லி, இதில ஆரும் தெரிஞ்சவையள் படம் எடுத்தா ஒரு கொப்பி வேண்டி அனுப்புவமண்ணே.''

''ஏனாம் கணபதி படத்தை! உதைவைச்சுக் கொண்டு கும்பிடப் போகினமாமோ?''

''பரமண்ணே!...... அதுகளுக்கும் எங்கட கோயில் எண்டு பாக்கிறதில ஆசையிராதா?''

''ஆசையிருந்தா அங்கயிருந்தா படத்தில பாக்க வேணும். அது சரி அதுதான் இப்ப மாப்பிள்ளை இல்லாமல் நம்ம ஊரில படம் வைச்சு மாலை போடுற மாதிரி. இனி எங்கட சுடலைகளிலையும் அவையளிட படத்தை வைச்சுத்தான் எங்களுக்கு கொள்ளி வைச்சாலும் வைப்பினம் போல.''

''பரமசிவமண்ணே! கோயில்ல நிண்டு கொண்டு ஏன் இந்த அவச்சொல்லுகளை. நாங்கள் பங்கேற்றம் தானே. இத்தனை வருஷமா அரக்காத தேரை, இந்த வருஷம் இழுக்கேக்க நாங்களும் பங்கேற்றம் எண்டதில எங்களுக்கு ஒரு பெருமைதானே.'' என்ற கணபதிப்பிள்ளையின் வார்த்தைகள் தம்மை மறந்து புதிய பலத்தைக் கொடுத்தபோது,



''நாங்கள் இங்க இருந்தும் இதில பங்கேற்காம இருந்திருந்தா அது கூட சரித்திரத்தில ஒரு வடுவாய்ப் போயிருக்கும்.''

''கணபதி பழம் பெருமையே பேசிக் காலத்தைக் கடத்தாம, காலத்தை உணர்ந்து, செயல்படுகிறதுதான் வாழ்வின்வெற்றியே தங்கி இருக்கு'' என்றார் பரமசிவம்.

மேக மூட்டத்தைக் கண்ட கணபதிப்பிள்ளையோ, ''பரமசிவம் அண்ணே! இந்தக் குளிர்காற்றும், மின்னலும், இடியும், வான மூட்டத்தையும் பார்த்தால் மழை குழப்பி விடும் போல...'' என தயங்கினார்.

''கணபதி எத்தனையோ இடரைத் தாங்கின எமக்கு, இந்த இடியும் மின்னலும் என்ன செய்யும். பயப்டாமற் பிடி. எல்லாரும் ஒன்றுபட்டால் விரைவாய் தேர் இருப்பிடத்திற்கு சென்றிடும். காலத்தைப்பார்த்து எங்கட காலத்தைக் கைவிடாமல் இந்தக் காலத்தில் நிலைக்கும் ஒரு காலத்தைப் படைப்பம் என்ற நம்பிக்கையோடு வடத்தைப் பிடி.'

என்ற பரமசிவத்தின் நம்பிக்கைக் கூற்றோடு பல பலம் கொண்ட கரங்களும் வடம் பிடித்து இழுத்தபோது, அந்த ஒற்றுமையில் ஒரே குரலாய் 'அரோ ஹரா' ஹோசம் தேசமே அதிர, தேரின் அசைவில் குலுங்கும் மணி ஓசை ஒலி கேட்டு எல்லோர் மனதிலும் மகிழ்ச்சி பொங்கிப் பிரவாகித்து, இருப்பிடத்தை நோக்கி தேர் விரைந்தது. ●

ஆவணி 1992



RangaRakes
Tamilnavarasam.com

# காவல்

முற்றத்தில் இருக்கும் மாமரத்தால் தேவனுக்கு தினமும் காலை முதல் மாலை வரை காவல் வேலைதான். வெளிநாட்டால் வந்தவன். ஒரு வருடம் சென்றும் மெழுகு போன்று மினுமினுப்பாக உள்ள தோற்றத்தைப் பார்த்தவர்கள், எல்லாம் வீரப்பரம்பரையின் வாரிசாகப் பொலிசர் வீட்டு மருமகன் வந்து வாய்ச்சார் என்று சொல்லும் போதெல்லாம் ஓய்வு பெற்ற பொலிசர் சிவராமுவுக்கு நிமிரும் நெஞ்சும் மீண்டும் முன்னைய இளமைத் தோற்றத்தையே நினைவூட்டும்.

அந்த ஊரில் இவர்கள் வீடோ ஓர் பொலிஸ் நிலையம் போல் தான் காட்சிதரும். சிறுவர் முதல் பெரியோர் வரை தலை சாய்த்துச் செல்லும் அளவுக்கு சட்டம் ஒழுங்கு



நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கும். வாசல் கதவைத் தாண்டும் போது பல விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டும் என பாதை மாறிச் செல்லும் ஜீவன்களும் அதிகம். அந்தக் கால பொலிஸ் உத்தியோகத்திற்கு அப்படி ஒரு மவுசு தான்.

பூத்துக் காய்த்துக் கனியும் வரை பாத்திரசது, வீதியோரம் தலை காட்டும் மாமரக் கொம்புகளில், பதம் பார்த்து எறிந்து விழுத்துவதில் இன்றைய சிறுவர்களின் துணிச்சலுக்கு பஞ்சமும் ஓர் காரணம் எனலாம். தினசரி காய்த்த மரத்தின் கல்லெறிகள் வீட்டு முகட்டின் ஓட்டினைப் பதம் பார்க்கும். இதனை பதுங்கி இருந்து பாய்ந்து பிடிக்கும் வீட்டு நாய் போல் தேவன் தனது பாய்ச்சல் மூலம் பலரைப் பிடித்து, பிரம்படி கொடுப்பதும், அடிபட்டாலும் ருசியோடு சேர்ந்த பசி விடாது தொடர்வதும் இன்றைய தொடராகி விட்டது. இதுவே அவர்களுக்கு ஒரு நேர உணவாகியும் விட்டது.

தேவனின் திருமண ஒரு வருட பூர்த்தி நாளும் நெருங்கி விட்டது. வீட்டை ஒழுங்கு படுத்துவது முதல் வீதியோரம் பல இன்று புதிய அகதிங்களின் மாமா முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கவும் தேவனின் கடமைகள் இன்று அதிகமானதால் சிறுசுகள் பலருக்கு அடி போட்டதோடு கட்டிவைத்து காரியம் பார்த்த செயல்களும் அவனுக்கு உடல் களைப்பினை அதிகப்படுத்தியது. ''பூனைக்கு விளையாட்டுசுண்டெலிக்கு சீவன் போகும்'' நிலைபோல் தான் சிறுவர்க்கு ஏற்படும்.

திருமண நிறைவு நாள் நெருங்க, தேவனின் மனைவி தேவியோ தனது உறவினர்க்கு தம் பெருமைகளை எடுப்பாகக் காட்ட, உடைகள் முதல் நகைகள் வரை ஆயத்தம் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். மறைத்து வைக்க புதைத்து வைத்த நகைகளை எடுத்து ஒருமுறை அணிந்து ஒத்திகை பார்த்த பின் இரவு படுக்கை அறையில் பத்திரப்படுத்தப் பட்ட பாடுகள் அவளுக்கும் களைப்பு மிகுதியாய் இருந்தது.



RangaRakes
Tamilnavarasam.com

இன்னும் இரண்டு தினம் வீட்டில் மீண்டும் உறவினர் சந்திப்புக்கள், பலவித ஆயத்தகளுடன் தங்கள் பெருமையை வெளிக்காட்ட, வெளிநாட்டு மாப்பிள்ளை பொலிசர் வீடு களை கட்டியது. தேவனுக்கு ஏற்ற தேவிதான் என பெருமைப் படும் பொலிசார் சிவராமுவும் தனது வேலைக் களைப்போடு வெளிநாட்டு பெருங்குடியில் ஒரு முறடை முண்டி விழுங்கி விட்டு, இவ்வுலகை மறந்து தூங்கி விட்டார்.

அந்த இரவின் இருளில் எல்லோர் கடமைக்கும் ஒய்வாக தம்மை மறந்து தூங்கும் போது, தேவியோ கற்பனை உல கில் திருமண நாளை நினைவூட்ட முனைந்தாள். அந்த முதலிரவு நினைவுகள் அவள் மனதுக்கு தூங்கமோ வர வில்லை. இருள் கவ்வியிருந்த வேளை மின் ஒளி கூட அவளுக்கு துணையாக இல்லை. கணவன் தேவனின் தூக்கம் அவ ளைத் தனிமைப் படுத்தியது. பூனையோ, எலியோ அந்த இருளில் தனது சுதந்திர வாழ்வைத் தொடர்வது போல் சத்தங்கள் மிகுதியானது. தேவி தன் புலனை சத்தம் வரும் திசைக்குத் திருப்பினாள். இதுவரை வெளியில் கேட்ட அந்த அரவம் உள் வீட்டிற்குள் புகுந்து விட்டது போலப் பட்டது அவள் புலனுக்கு. தேவனின் போர்வைக்குள் புகுந்து கணவனை மெல்லத் தட்டி எழுப்பி மெல்லிய குரலில் தனது பயத்தினை வெளியிட்டாள். தேவனோ குரல் கொடுக்க வில்லை. சத்தமோ பலமானது.

தேவியோ மீண்டும் தேவனிடம், ''இஞ்சேரும் சத்தம் கேக்குதப்பா அறைக்குள்ள! பயமா இருக்கு எழும்புங்கோ'' என்றாள் பதில் எழவில்லை.

மீண்டும் ஓர் முறை ''என்ன நித்திரை எழும்புங்கோ... அலுமாரிச் சத்தமாயிருக்கெல்லோ...'' என்றாள் பதட்டத் துடன்.



''தேவி! நான் அப்பவே முழிச்சிட்டன், பொறும், பொறும்! என்ன நடக்குது என்று பாப்பம்'' என்று மௌனக் குரலால் பதில் சொன்னான்.

''எழும்பிப் பாருங்கோவன்! சத்தம் பெரிதா கேக்குது. கள்வன் போல கிடக்கெல்லோ...''

''அது அப்பவே தெரியுமப்பா பொறும், பொறும், என்ன நடக்குது, என்ன செய்யிறான் எண்டு பாப்பம்.''

தன் கணவனின் துணிச்சல் மிக்க வார்த்தையும், அவனது வீரத் தோற்றமும் அவளுக்கு தெம்பைத் தந்தது. இருந் தாலும் கள்வன் தான் என தேவனும் கூறிய வார்த்தைகள் தான் அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''அலுமாரி உடைக்கும் சத்தமாயிருக்கே! ஐயோ நகை யெல்லாம் அதுக்குள்ளதானே இருக்கு அப்பா'' என தேவி முனங்கினாள்.

''தேவி கொஞ்சம் பொறுமன், என்ன செய்யிறான் எண்டு பாப்பம், சத்தம் போடாம இரும் நான் பாக்கிறன்'' என பெட்சீற்றை நீக்கி ஒரு முறை ஆமை ஓட்டிற்குள் இருந்து எட்டிப் பார்ப்பது போல் எட்டிப் பார்த்தவனுக்கு...

இருளில் ஓர் உருவம் அலுமாரி சகலதையும் தேடி எடுப் பதையும், முடிச்சுக்களுடன் கையில் ஏதோ பொருள் தெரிவதும் தேவனின் கண்ணில் பட்டுவிட்டது.

''என்னப்பா என்ன...!'' தேவியின் பதற்றம் மிகுந்த குரலுக்கு'' கண்டிட்டன் நீர் கொஞ்சம் சத்தம் போடாதை யும். கொஞ்ச நேரம் என்ன நடக்குது எண்டுபார்ப்பம்.'' என தேவனின் தெம்பூட்டும் குரலை தாங்காது அந்த இருளில் மௌனக் குரல்கள் விக்கி விக்கி ஏக்கப் பெருமூச்சுகளை விட்டுக் கொண்டன.



RangaRakes
Tamilnavarasam.com

''என்னப்பா வீட்டில் இருந்த சத்தம் விறாந்தையில் கேக்குதே, நீங்க எழும்பேல்லையா?''

''பொறும், பொறும், வாசலுக்கதானே நிக்கிறான். என்ன செய்யிறான் எண்டு பாப்பமே.''

''என்னப்பா இன்னும் பாத்துக் கொண்டு இருக்கிறியள். சுவரால எல்லோ பாய்கிறான் போல...''

''அதுதானே, பாத்தன் வாசல் சத்தம் கேக்கேல்லை, சுவரால பாஞ்சாலும் எங்க போயிடுவான். கொஞ்சம் பொறும் என்ன நடக்குதெண்டு பார்ப்பம்.''

''பொறும், பொறும், எண்டு படுத்துக் கிடக்கிறியளே என்ன கல்லு மனசா உங்களுக்கு...'' என்றவள் எழுந்து அலுமாரியைப் பாத்தாள். ''நகைகள் முதல் உடைகள்வரை, எல்லாமே போயிற்றுதே... இனி என்ன பொறுக்க இருக்கு, என்ர தாலியும் போயிற்றுதே ஐயோ...'' என்ற அலறல் கேட்டு பொலிசார் சிவராமன் திடுக்கெழுந்து விட்டார்.

''என்ன... என்ன நடந்தது? என்னை எழுப்பி இருக்கலாமே! எங்கட பரம்பரையில நடக்காத ஒண்டு, என்ர வீட்டில நடந்திட்டுது. எங்கட கௌரவம் என்னாவது. தாலியும் போச்சுதா...? பரம்பரைப் பவுணாச்சே...'' என பதறியபடி மாரடைப்பால் கட்டிலில் சாய்ந்தார் பொலிசார் சிவராமன்.

அந்த இருளில் ஒளியேற்றாது குசுகுசுப்பாகவே பேச்சுக்கள் இருந்தன. ''கௌரவம் என்னாவது? இரண்டு மல்லர் இருந்தும் ஒரு கள்ளனைப் பிடிக்கவில்லையெண்டால் எங்கட ஊருக்கு உதவாத முருக்குப் பெருத்தென்ன இதுவரை காட்டிய வீரம், மாத்தடி மாங்காய்க்கு மட்டும் தானா?'' என வேறு குத்தல் பேச்சுக்கள் தேவனுக்கு உறுத்திக் கொண்டன.



விடிந்தது காலை, உறவினர் வருகையில் கலகலப்பை எதிர்பாத்த வீட்டில், களையிழந்து முகம் வீங்கிய கண்ணீர்க் கதைகளைப் புட்டே விட்டாள் தேவி. பொலிசாரும் பேசா மடந்தையாய் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்தார்.

தேவனை அண்டி குசலம் கேட்டனர் உறவினர். எல்லோர் கேள்விக்கும் ஒரே வார்த்தையில் பதில் சொன்னான்.

''உங்களுக்கு என்ன தெரியும். கள்ளன் வரேக்கயே எனக்குத் தெரியும். உடுப்பென்ன, நகையென்ன எதைக் எதைக் கொண்டு போனாலும்] பரவாயில்லை. தேவிக்கு நான் வாங்கிக் கொடுப்பன். அவனைத் தாக்கி தாலியையும் ஒரு அடியிலே பறிச்சிருப்பன். தவறீற்றா வாழ்நாள் பூராவுமே தேவி தாலி போடாமலே இருக்க வேண்டி வருமே எண்டுதான் முயற்சிக்கேல்லை'' என்ற தன் வீரத்தனத்தைச் சொன்னபோது தான் தேவியும் கோபம் கொண்டவளாய் சொன்னாள்.

''கள்ளனுக்கே காவலில்லாத கணவனை நம்பி நாளைக்கு கற்பு சூறையாடக் கயவர் வந்தாலும் பொறுத்திருப்பார் தானே. எதிலும் இனித் தன்னைத்தானே காத்துக்கொள்ள நல்ல பாடம் கற்றுக் கொண்டேன். இனி என்னைக் காக்க எனக்கு ஒரு சவர பிளேற்றாவது தேவைதான்'' என்ற வார்த்தையில் உள்ள உண்மைகள் கூடியிருந்த எல்லோர் மனதையும் உறுத்திற்று.



RangaRakes
Tamilnavarasam.com

# உறவு

''சாந்தா! சாந்தா! இங்கு வந்து பாரு மன் ஆரு வந்திருக்கிறதெண்டு.'' என குழையும் குரலுடன் தன் உறவின் தரிசனத்தைத் தெரிவித்தான் தன் மனைவிக்கு சாந்தன்.

ஈர விறகுடன் காலை உணவை தயார் செய்து கொண்டு நின்ற சாந்தாவுக்கோ, புகைமூட்டத்துடன் உள்ளப் புகைச்சலும் சேர்ந்து வேர்த்துக் கொட்டியது. அவள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவளாய் வலிந்திழுக்கும் புன்னகையுடன் வாசலுக்கு வந்துவிட்ட சாந்தா, ''என்ன இப்ப திடீர் எண்டு வாறியள். ஏதும் அவசரமோ வதனா!'' என மாமி வீட்டுப் புதினத்தைக் கேட்டறிய முனைந்தாள்.

''என்ன சாந்தா வந்தவள் இருக்கட்டன். அதுக்கிடையில நிக்க வைச்சுக் கொண்டு, என்ன அவசரம்.'' என உறவுக்காக குரல் கொடுத்தான் சாந்தன்.

''இல்லை உங்கட வீட்டில ஏதும் வேலை இருந்தாத் தானே, இங்க வருவாங்க! அதுதான்...'' என தனது நீட்டோலையை விரித்தாள் சாந்தா.

''ஏன் அண்ணி அப்பிடிச் சொல்லுறீங்க. வீட்டில ஒண்டு எண்டா நீங்கதானே முன்னுக்கு நிக்கவேணும் வேறு யார் இருக்கினம் எங்களுக்கு.''

''அட, நீ ஒண்டு எத்தின பேர் இருக்கினம் இப்ப. முந்தித்தான் அண்ணன் வேணும் அண்ணி வேணும். இப்ப எல்லாம் வெளிநாட்டில இருந்து வாற பதில் வேணும். இது எல்லா வீட்டிலயும் இப்ப பணம் வாற பக்கத்தின்ர முடிவு தானே முடிவு'' என்றாள் சாந்தா.

''எப்பிடி இருந்தாலும் அம்மா, அண்ணன் அண்ணியைக் கேட்டுத்தானே எதையும் செய்வா அண்ணி.''

''பெயருக்கு எழு பிள்ளைகள் இருந்தாலும், அம்மாவுக்கும் இப்ப இவர் மட்டும்தானே ஊரில நிக்கிறார் எண்டதில தானே அவரைக் கூட கேட்டுச் செய்கிறா. இல்லாட்டி இங்க செய்யவும் ஆள் வேணுமே.'' வார்த்தைகள் இரு பக்கமும் முழங்கும் அதிரடி போல் வார்த்தைகள் நீண்டுகொண்டே பல உள்ளக்கிடக்கைகள் பரிமாறப்பட்டதை உணர்ந்த சாந்தன் பார்த்துக் கொண்டு எதுவும் பேசாதவனாய் பிரச்சினையில் இருந்து ஒதுங்கி வாழ நினைத்தவர் போல் இருப்பிடத்தை விட்டு எழும்பி கிணற்றடிப் பக்கம் சென்று விட்டான்.

அவன் மனம் கூட குழம்பிய குட்டை போல் தெளிவற்று தன் உறவின் தொடர்புகளைச் சிந்திக்க வைத்தது.





RangaRakes

Tamilnavarasam.com

வீட்டில் மூத்தவன் எனத் தன்னையே மெழுகுபோல் உருக்கி தன் சகோதர உறவுகளின் உயர்வுக்குக் காலாய் இருந்து தன் வாழ்வின் உயர்வுகளையே அர்ப்பணித்து வாழ்ந்தவன் சாந்தன்.

அந்த வீட்டின் கலகலப்புகள் முன்பெல்லாம் தினமும் ஏதோ கொண்டாட்டங்கள் போல் கூழைக் குடித்தாலும் சகோதரர் குடும்பத்துடன் தாயாரின் தரிசனத்துக்காக தங்கிச்செல்வதும், பேரப்பிள்ளைகளின் மழலை மொழிகளில் ஊறித் திளைப்பதும் அந்த வீட்டின் சிறப்பாக இருந்தது. அவைகள் எல்லாம் கண் பட்டது போல் ஓலைக்குடில் மாளிகையாக, பணம் தேடும் படலம் பிள்ளைகள் பலதிசை சென்றன. அப்பாவின் இழப்பும் இவற்றுக்கெல்லாம் பெயரளவில் உறவுகள் என ஜேர்மன், பிரான்ஸ், சவுதி விலாசமிடப்பட்ட விளம்பரங்களுடன் அயலவரின் துணையுடன் சாந்தனின் குடும்பம்தான் சகலதையும் முன்னின்று நடத்தி வைத்தது.

அனுதாபக் கடிதங்களுடன் தமது உறவின் உருத்துக்களையும் தம் சொத்து பங்குகள் எனவும் கேட்கும் தூதுகளாய் எல்லோர் கடிதமும் வந்து சேர்ந்தன.

இன்று அவ்வூரில் உயர்ந்த நிலை என பணத்தாலும் வளத்தாலும் பெருமைப்படும் அளவிற்கு சாந்தனின் பெற்றோர் சகோதரர் வளர்ச்சிகள் தோற்றத்தில் பொலிவாய் இருந்தாலும் எத்தனையும் உணராத உள்ளங்களாய் உறவு சிதைவுற்று, போட்டி பூசலால் தமக்குள்ளே பலப்பரீட்சை நடாத்துவது பெரும் தாக்கத்தையே கொடுத்தது.

அம்மாவுடன் திருமண வயதைத் தாண்டும் தங்கை வதனாவும், வீட்டுக் காவலுக்காய் விட்டுச் சென்ற போது தனிக் குடித்தனமாக சாந்தனும் உள்ளூர் வாசியாய் தன் குடும்பமென மனைவி சாந்தா வீட்டில் மூன்று பிள்ளைச் செல்வங்களோடு வாழ்ந்து வந்தான்.

மருமக்கள் இங்கு இருந்த போதும் தங்கை வதனாவின் திருமணப் பேச்சுக்களுக்கு அவர்களின் ஆலோசனையும் அபிப்பிராயங்களும் தடையாகவே போயின.

இன்று கூட அதே பல்லவியில்தான் வதனா தன் எதிர் காலத்தை நிர்ணயிக்க அண்ணன் அண்ணியை நாடி வந்தாள்.

''என்னங்க வதனாவுக்கு கலியாணப் பேச்சாமே! அது தான் மாமி ஒருக்கா வரச்சொல்லி வந்திருக்கிறா.''

''அப்படியா! இது என்ன புது இடமா? எப்பிடியாம் அம்மாவுக்கு பிடிச்சிருக்காமா?'' என சாந்தன் அறிய ஆர்வப்பட்டான்.

''எது இடமா இருந்தென்ன, இப்ப எவ்வளவைக் கேட்டாலும் தாரு தரப்போகினம் இதுகளுக்கு.''

''என் சாந்தா வெளியில இருக்கிறவையளிட்டை சொல்லிக் கேக்கிறதுதானே.''

''என் அதுகளும் உங்களைப் போல ஏமாந்ததுகளே. இது வரையும் இருக்கேக்க கவனிக்காததுகள் இப்ப அங்க போன பிறகு கப்பலைச் சாட்டி கடிதம் கிடைக்கேல்லை எண்டு சொல்லி விடுங்கள். ஏதோ முன்னுக்கு எல்லாம் யோசிச்சு முடிவு செய்யுங்க.''

''சரி... சரி... எல்லாம் எனக்குத் தெரியும். சாந்தா வதனாவின்ர மனசை குளப்பாம நாங்க நாளைக்கு வாறதெண்டு சொல்லிவிடன்'' என உள்ளத்தில் எழும் புளுக்கத்தையும், உடல் வெப்பத்தையும் போக்க நன்றாக கிணற்றில் அள்ளிக் குளித்தான் சாந்தன்.





RangaRakes
Tamilnavarasam.com

அன்று முழுவதும் சாந்தாவுக்கும், மற்றைய சகோதாரிகளின் முன்னைய சாட்டுதல்கள் போலவே ஆத்துக் கதைகளைச் சொல்லியே சாந்தன் மனதை மாற்ற முனைந்தாள்.

"ஏன் சாந்தா அம்மா இருக்கும் போதே ஒன்று நடந்திட வேணும். பின்னுக்கு வதனாவை யார் கவனிக்க இருக்குதுகள்."

"அப்ப புவனாவை கட்டிக் குடுத்திட்டா அப்பாவைப்போல அம்மா பாயில் படுக்கையிலே கிடந்தா ஆரு பாக்கிறது. வதனா வீட்டில இருந்ததால அப்பாவை பாத்தாள். அவளும் கலியாணம் கட்டிப் போனா வருகிறவன் பாக்க விடுவானோ. பிறகு அதுவும் உங்கட பொறுப்புத்தான் பாருங்க" என்றாள்.

"ஏன் அப்பிடிச் சொல்லுறீர் சாந்தா. அம்மாதானே அவவைப் பாக்கிறது என்ன ஒரு பாரமா?"

"அது சரி நீங்க சொல்லுவியள் பிறகு எல்லாம் நான் தானே செய்து முடிக்க வேணும்."

"அட நீ ஒண்டு. வெளியில கூடப் போயிடுவா அம்மா, இது எல்லாம் பாத்தா..."

"அம்மாவை விட்டிட்டு இருக்க மாட்டம் எண்டவையள் எல்லாம் அம்மாவிட்ட சொல்லாமலே போயிற்றினம். சரி எதுக்கும் அம்மாட நிலையையும் யோசிச்சு போய் எப்பிடி எண்டு பாத்து வாங்களன்" என சலிப்போடு கூறினாள் சாந்தா.

காவோலை விழ குருத்தோலை சிரிப்பது போன்று சாந்தாவின் வார்த்தைகள் அவன் மனதில் செல் போல் வீழ்ந்து சிதறின. இருபக்க தாளமும் ஏற்கும் மேளம் போல தன் உறவைத் தரிசிக்க அம்மா வீட்டுக்குச் சென்றான் சாந்தன்.

"ஆரு சாந்தனா! வா வா" என தன் வரவுக்காக காத்திருந்தது போல் அழைத்துக் கொண்டாள் அம்மா.

"என்னம்மா வந்தவங்களா? எப்பிடி! இடம் புடிச்சிருக்கா?"

"இந்தக் கலியாணம்முந்தி வந்ததுதான் சாந்தன். காலம் விடவில்ல. பேந்தும் ஒருக்கா கேட்டுப் பாரன். இதுதான் தலைவிதி எண்டா மாத்த முடியுமா? அதை ஒருக்கா போய் பேசிச் சொல்லன் தம்பி."

"அது சரி அம்மா! இதை முந்தியும் பேசி வெளியில உள்ள உன்ர மக்கள், மருமக்கள் சொல்லித்தானே தள்ளிப் போட்டனீங்க. இப்ப என்ன பிறகும் அவையள் சொல்லினம் எண்டு சாட்டுச் சொல்லுறதெண்டா இப்பவே சொல்லி விடுங்க முடிவை வீணாக அலையாம."

"தம்பி! அவையளுக்கு என்ன தெரியும்? அங்க இருந்து சொல்லுவினம். இங்க மாப்பிளையளுக்கு அலையிறதை அவையள் உணருவினமே."

"இது இப்பதான் உணர்ந்தியளா அம்மா! அந்த மாப்பிளை பெரிய உத்தியோகம் இல்லையெண்டுதானே அவையள் மாட்டன் எண்டவையள். பிறகு அவையளுக்கு மரியாதைக் குறைவு எண்டு சொல்லீற்றா என்னம்மா செய்யிறது."

"இவ்வளவு காலமும் அவையள் எதையும் பாத்தினமா? வதனாவுக்கு வயதுதான் போகுது. நொட்டைகள் சொல்லு





RangaRakes
Tamilnavarasam.com

வினம். அவையளிலும் பாக்க இங்க ஒரு சின்ன வேலையும் செய்து கொண்டு நல்ல குணமான பெடியன் எண்டும் அடுத்த வீட்டு ராசதுரையும் சொல்லிச்சு. அங்க வேலையும் இல்லாம அகதிப் பணத்தை எதிர்பாத்து இருக்கிறதை விட ஊரோட நாங்க அறிஞ்சதை செய்து பாத்திட்டுச் சாவம். இனி என்னைப் பாக்கவும் யாரிருக்குதுகள். அதுகள் எல்லாம் போன போன இடத்திலதானே சுந்திற்றுதுகள். எல்லாம் வாற காலத்துக்கு வருகுது. ஒருக்கா கதைதம்பி.''

''அம்மா! முந்தியும் பேசேக்க இதத்தானே சொல்லி எத்தனை நொட்டையளை அவையள் சொல்லிச்சினம். இப்ப ''காலம் வந்தா கதவு திறக்கும்'' எண்டுதானே வதனாவின்ர வயதை முப்பத்திரண்டை தாண்டு மட்டும் இருந்திட்டு இப்ப ஏதோ காலத்தைச் சாட்டி நல்லதைச் செய்யிற மாதிரி நினைக்கிறியள்.''

''தம்பி! இப்ப வரைக்கும் ஏதோ எங்களைப் பாத்திட்டாள். இனியும் அவள் வாழ்க்கை வீணாகப்படாது. நான் இல்லாக் காலத்தில் அவள் கலங்கப்படாது.''

''அம்மா! இப்படித்தான் தங்கட கடமை முடிக்கும் வரைக்கும் பாத்துப் போட்டு முதலைக் கண்ணீர் விடுறதில என்ன பயன்? அவங்கட வயது உணர்ச்சிகளை உணராம இருந்து காலம் வரும் எண்டு காலத்தைப் போக்கினா நடக்குமா? எதையும் தாங்களே வாய்விட்டு கேட்டாலும் கேலிப்பட்டமே கட்டி விடும் இந்தச் சமூகத்தில இப்படித் தான் காலங் கடந்த நிலையில வாழுதுகள் பாரம்மா. கூட்டுக் குடும்பம் எண்டு எல்லாரிட்டையும் கேட்டு செய்யிற திலயும் காலம் போயிடுது. இதால இளசுகளின் ஏக்கத்தை புரியாத உறவுகளால எத்தனையோ விபரீதங்களே நடக்குது,'' என்று உளக்கிடக்கைகளை கூறிவிட்டு வரன் தேடிப் புறப்பட்டான் சாந்தன்.



திருமணப் பேச்சுக்கள் பழங்கதையாகி விட்ட வதனாவின் மனத்தில் மீண்டும் ஓர் புத்துயிர்ப்பு ஏற்பட்டது.

பலர் கூடி குறைகளையே பெரிதுபடுத்தும் சூழல் இன்றில்லாவிட்டாலும் வீட்டில் எல்லா நிகழ்விலும் இருந்த கலகலப்பு இல்லாது பல திக்கும் சென்று விட்ட சகோதர உறவுகள் படங்களாலும், கடிதங்களாலும் உறவு கொண்டாடினதே அன்றி எவரும் முன் நின்று நடாத்த அருகில் இல்லையே என்ற கவலை அம்மாவுக்கும் அதிகம் வாட்டியது.

இந் நிலையில் சாந்தன் சென்று வந்த பின் எந்த கதையும் வெளிவராது, அம்மாவும் அண்ணனும் குசுகுசுப்பது கண்டு மீண்டும் உற்சாகம் குன்றி கானல் நீர் போல்த்தான் இப்பேச்சுவார்த்தைகள் என வதனா எண்ணிக் கொண்டாள்.

அடுத்த வீட்டு ராசதுரை அண்ணன் வந்து கதைத்த வேளை அதற்கான காரணம் தெரிய வந்தது. ''இது தானி காலம் எண்டா என்ன செய்யிறது.'' என்ற ராசதுரையின் பேச்சைக் கேட்ட அம்மாவின் வார்த்தைகளில்,

''நல்ல காலம் இராசதுரை, கலியாணம் எண்டு நடந்திருந்தா இத்தனை காலம் இருந்திட்டு ஒரு நொண்டியைப் போயா கட்டிறது.''

''ஏன் இப்படி எங்கட பக்கமும் எதிர்பாராம அந்த ஷெல் விழுந்திருந்தா நாங்களும் ஊனமானவராய்ப் போயிருப்பம் தானே? அதற்கப்புறம் எங்களை யார் ஏற்பினம்.'' என்று தேநீருடன் வந்த வதனாவின் பேச்சுக் கேட்டு ஷெல் பட்டுத் திகைத்தவர் போல் விழித்துக் கொண்டனர்.

''அதுதானே முன்னமே விழுந்து எங்களைக் காத்திற்று பிள்ளை.'' என்ற ராசதுரை அண்ணனின் பேச்சை ஏற்க மறுத்தவளாய்;



RangaRakes
Tamilnavarasam.com

''ஊனம்! இப்ப உடலில் மட்டும் இல்லை. எங்கட மன சிலும்தான் ராசதுரை அண்ணே. இவ்வளவு அழிவையும் கண்டு எனக்கல்ல அவங்களுக்குத்தான் என ஆறுதல் கொள்ளுறமே, இதைவிட இத்தனையும் தாங்கி வாழ வேண் டும் என வைர மனத்துடன் வாழ்க்கையை ஏற்றுக் கொள் ளுறவங்களுக்காக நான் வாழுறதை நினைச்சா அதில ஒரு மகிழ்ச்சிதானண்ணே. இதற்கெல்லாம் சாட்டுச் சொன்னா இனி வரும் காலத்தில ஊனமுற்றவர்களும் ஒதுங்கிற்றா அதுகூட சாதிப் பிரிவினையை விட பெரிசா வளர்ந்திடும்.''

''வதனா! நீ புரியாமற் பேசிறாய். வாழ்க்கையை விளை யாட்டாய் நினைக்கக் கூடாது. உனக்கென்று ஒரு நல்ல மாப்பிளைகிடைக்காமலா போகும். அதுக்காகப் போய்...''

''அதுதான் சொன்னனே அண்ணே! இரக்கப்பட்டல்ல, இங்க வாழ முடியாது எண்டு மன ஊனத்துடன் ஓடி ஒழித்த வையளை விட எம் மண்ணில் வாழுவோம் என்ற நெஞ்சுரம் தான் பெரிதண்ணே. இது வெறும் உடலிலல்ல மனதில ஊன மில்லாதவரோட வாழத்தான் நான் விரும்பிறன்'' என்று புரட்சிப் பெண்ணாக கூறிய வதனாவின் வார்த்தைகள் அங் கிருந்த எவருக்கும் பேச வார்த்தைகளே எழவில்லை.

அந்த மௌனத்தைக் கலைத்த முகூர்த்தம் பற்றிய பேச்சுக் கேட்டு வதனாவின் வதனத்தில் மகிழ்ச்சி தவழ்ந்தது.

●

கார்த்திகை 1992



# பயன்

காலைக் கதிரவனின் ஒளி பட்டுச் சோம் பல் முறித்தவராய் படுக்கை விட்டெழுந்த பரமசிவம், மனைவி கமலத்தின் தேநீருக் காக காத்திருந்தவர் ''என்னப்பா! வர வர நேரகாலம் இல்லாம போச்சு இப்ப...'' என குரல் கொடுத்தார்.

''என்னப்பா செய்ய? பால் இன்னும் வரேல்லையே! வெறுந் தேத்தண்ணி தரட் டுக்கா'' என்ற கமலத்தின் குரலுக்குப் பதில் கொடுக்க பரமசிவம் மனமில்லாதவராய் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தவர் ''எண்பது, இருபது, பதின்மூன்று இது என்ன தினமும் இப்படியே போனா...'' எனத் தொடர்ந்தார்.

எதிர் வீட்டிலிருந்து பத்திரிகை பார்க்க



RangaRakes

Tamilnavarasam.com

வந்த அருணாசலமோ ஒன்றுமே புரியாதவராய் ''என்னண்ணே! புதுக்கணக்கில இறங்கிற்றீங்க'' என்றவருக்கு.

''தினசரி ஒரே செய்தியளைத்தான் மாறி மாறிப் போடினம் போல. நல்லநிலை முழிச்சு ஒரு நாளைத் தொடங்குவம் எண்டா எல்லாம் இப்படியாத்தான் கிடக்கு, பாரன்.''

''இஞ்ச தா அண்ணை படிச்சுப் பாப்பம் ஒருக்கா'' என்றான் காரியத்தில் கண்ணாயிருந்த அருணாசலம்.

''இதில் என்ன படிக்க இருக்கு; ஒரே கொலை, கொலை. இதுகள் இல்லாட்டி இப்ப நாளே விடியாது போல'' என்று படித்துக் கொண்டே சினந்தார் பரமசிவம்.

''பரமண்ணை, செத்தது யாரு? எங்கடையளோ அல்லது அதுகளோ!'' என்று அருணாசலம் வியப்போடு பார்த்திருக்க...

''ஏன், யாரு செத்ததெண்டு பாத்துத்தான் மனம் இரங்குமோ? எல்லாம் உயிரெண்டு முதலில் நினையுங்கோ. எங்கடையள் எண்டா என்ன உயிரை குடுக்கப் போறியளோ?'' எனக் கூறியபோது இரத்தக் கொதிப்பு வந்து விடும் போல் இருந்த பரமசிவத்துக்கு இடையே மருந்து போல கிடைத்தது, கமலத்தின் தேநீர்.

''இதைக் குடியுங்கோ! சும்மா ஒரு பேப்பரை வைச்சுக் கொண்டு இரண்டு பேரும் சண்டை பிடிக்காம...'' என்று நீட்டினாள் கமலம்.

''கமலமக்கா! உங்கட பால் தேத்தண்ணிதான் இந்த இரத்தக் கொதிப்பை அடக்கும் போல...'' என்றவர் பேப்பரைக் கையில் வாங்கின மகிழ்ச்சியில் உரத்துப் படித்தார்.



''தானத்தில் சிறந்தது இரத்த தானம். இவை இன்று உடன் தேவை... இதென்ன சும்மா நெடுகிலும் இந்த விளம்பரத்தைப் போட்டுத்தான் இடத்தை நிரப்பினம்.'' என்று சினந்தார் அருணாசலம்.

''உங்களுக்கு ஏற்றமாதிரி எத்தச் செய்தியளைத்தான் போடுறது. காலை எழும்பினா ஒரு பால்தேத்தண்ணி இல்லாட்டி இயங்கமாட்டியள். ஒரு இரவல் பேப்பரில செய்தி படிக்காட்டி நாள் போகாது. இதுதானே இப்ப தினசரி வாழ்க்கையாயிட்டுது. உங்களை உசார் படுத்திறதுக்கு ஆற்றையும் பாலையும், பத்திரிகைச் செய்தியையும் நம்பி இருக்கிறியள் ஒழிய, உங்களால என்ன பயன் இந்த நாட்டில்?'' என கமலம் கடிந்து கொண்டாள். இதைக் கேட்ட பரமசிவத்துக்கோ பொத்துக்கொண்டு வந்தது கோபம்.

''ஏன்ரி கமலம் இவ்வளவு நேரமும் தேத்தண்ணி கொண்டுவரச் செண்டு போச்செண்டு இருந்தா, அதுக்கும் ஞாயம் சொல்லுறியே? பால் என்ன சும்மா கிடைக்குதோ அது நேரத்துக்கு எங்கட தேவைக்கு இல்லாட்டி அது என்ரி பின்னை?''

''மாடு பால் தருகுது. அந்தப் பால்தானே இப்ப கதைக்க இத்தத் தென்பைத் தருகுது. ஐந்தறிவு உள்ளதால ஆறறிவு படைச்சதுகளுக்கு உசார் வந்த மாதிரி, ஆறறிவு படைச்சதுகளும் உணர்ந்தா, அரை உசிரா வாடுற எத்தினை ஜீவன்களை உசிர்க்கப்பண்ணி உசார் ஊட்டலாம். அதை விட்டிட்டு சும்மா திண்ணைப் பேச்சும், கணக்கெடுப்புக்கும் இதுதான் நேரம் போல, வாழ்வைப் பயன் உள்ளதா ஆக்க வேணும். மாடு தன்ர இரத்தத்தைத் பாலாக தருகுது. அந்தப் பால் தானே எங்களுக்கு இரத்தமாகுது. அதை மற்ற ஜீவன்களும் தப்பிப் பிழைக்க நேரத்துக்கு ஏலுமானதை செய்யாம இரத்தக் கொதிப்பில சாகிறியள் ஒழிய இந்த உடம்பால ஊருக்கு என்னதான் லாபம்.'', என்ற கமலத்தின் வார்த்தைகள், கூட இருந்தவர்கட்கும் உறைத்துக் கொண்டது. ●

சித்திரை 1991



RangaRakes
Tamilnavarasam.com

# புதிய பிறப்புக்கள்

**மழை** மூட்டம் பனிக் குளிரும் மாறும் காலநிலையும் அந்த மாரி காலத்தின் பல நிகழ்வுகளை நினைவூட்டிக் கொண்டிருந்தது. மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்து தன் உழைப்பிற்கு திருமலைக் கடலையே நம்பி வாழ்ந்த சூசை பிடிக்கும் மீனை விற்று அன்றாடம் சீவிக்கும் குடும்பத்தவன்.

என்றும் போல அவன் பிடித்த மீனை விற்பதற்காக அவனது சைக்கிள் வண்டியில் புறப்பட்டான். விரக்தியின் விபரத்தை அவனது முகத்தில் வளர்ந்து சடைத்துவிட்ட தாடியும் மீசையும், உள் விழுந்த கண்களும் அவனை ஒரு மனிதத் தோற்றமாகக் காட்டிக் கொண்டது.



முன்பு போல அதிக தூரம் சென்று தொழில் செய்துவர முடியாத சூழல். தூர இடங்களுக்குச் சென்று விற்று வர முடியாத பாதுகாப்பற்ற நிலை. இன்று எல்லோருக்கும் ஏற்பட்டது போல்தான் சூசைக்கும் பல நெருக்கடிகளைத் தந்தது.

சூசையின் உறவினர் பலர் இருந்தும் குடும்பம் என மேரியோடு மணம் முடித்து விட்ட காலம் முதல் தானுண்டு, தன் வேலையுண்டு என மிகுதி நேரத்தை அந்த மாதா கோவிலில் மணி அடிப்பது முதல் ஆராதனைகளுக்கு ஆயத்தம் செய்வது வரை தன் பணிகளை இறைவனுக்கு அர்ப்பணித்து வருவதில் அவனும் மனைவி மேரியும் மகிழ்வில் இணைவார்கள்.

வருவாய்க்கு மிஞ்சிய செலவைத் தாங்காது அன்றாட வாழ்க்கையின் நிலையுணர்ந்து வீதி வியாபாரத்துக்கு சந்தையில் மீன் எடுக்க கடற்கரை சென்ற சூசைக்கு ஏக்கத்தைக் கொடுத்தது. அவனது விற்பனை வழிகளும் பாதுகாப்புக் கருதிக் குச்சொழுங்கை வழியாக கடன்பட்ட மீனை விற்று வருவது அவன் கண்ட அனுபவங்களே. இவை இன்று சூசைக்கு சவாலாக இருந்தன.

காரணமே புரியாத பதட்டம், தரையும் வானும் முழங்கும் ஒலிகள், எல்லோரும் ஒரே திசை நோக்கி ஓட்டமும் நடையுமாக, மூட்டை முடிச்சுகளுடன் இடம் பெயரத் தொடங்க அந்தப் பயணம் ஒவ்வொருவரின் வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப; ஓலைப்பை, சீலைப்பை, உரப்பை, சொப்பிங் பாய்க், சூட்கேசுகள், மூட்டை கட்டப்பட்ட பாலைவனப் பயணங்கள் போன்று ஓடுவதில் அன்றைய ஒட்டக குதிரைகள் போன்று; மிதிவண்டிகள், தள்ளுவண்டிகள், மனித உடல்கள் கூட மாடா சுமந்து செல்லும் பயணம் நேரம் செல்லச் செல்ல சத்தமும், சஞ்சலமும் ஓயாத ஒலியாக தொடர்ந்ததை எண்ணி எண்ணியே மனப்பிரமையுடன் ஓடிவரும்



RangaRakes
Tamilnavarasam.com

மக்களிடத்தே மனைவி மேரியும் வருவளா எனத் தேடி அலைந்தான்.

அங்கு சென்று வர தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவித்து நகர்வதால் நகரமே நகர்ந்து கிராமத்தை நிறைத்து வருவதும், ஒளியை விரட்டும் இருளாக இரவு அண்மிப் பதும் பதட்டத்தை ஏற்படுத்தவே மிதிவண்டியை தெரிந்த வீட்டில் விட்டு விட்டு ஓட்டமும் நடையுமாக தேடி அலைந்த சூசைக்கு மேரியின் தோற்றம் அந்த இருள் கவ்வும் நேரத் திலும் ஒளியாகத் தெரிந்து கொண்டது.

வீதிவழிப் பயணம் தடைப்பட்டு ஒற்றையடிப் பாதை வழியே நடைபோட ஆரம்பித்த மக்கள் கூட்டத்துடன் சூசையும், மேரியும் கண்ணீர் மல்க மனப்பாரமும், உடற் பாரமும் இளைக்க இளைக்க விளக்க முடியா விபரத்தையும் சுமந்து சென்றனர்.

சென்ற ஞாயிறுதான் கிறிஸ்து பிறப்புக்கான சிந்தனை களையும் அந்தச் சூழல் பற்றியும் குருவானவர் லோறன்ஸ் பிரசங்கித்தாரே. அவை பல பிராக்குடன் காதில் விழுந்த வார்த்தைகள், ''பிறக்க விருக்கும் மகனைத் தேடுவதால் ஊரை விட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தேவதூத னால் அருளப்பட்டபடி சூசையும் தேவதாயும் கழுதையில் பயணம் மேற்கொண்டார்கள். அந்தப் பயணத்தில் பாலை வனங்களைத் தாண்டி தலைமறைவான வாழ்வைத் தேடிச் சென்றது இறைவன் சித்தமென ஏற்று புறப்பட்டார்கள்.'' அந்த வார்த்தைகளை ஆண்டுக் கொரு முறை கேட்டுக் கொண்டாலும் அதன் அர்த்தம், அதன் அனுபவம் புரியாது எங்கோ எப்போதோ, வசதி குறைந்த காலத்தில் அப்படி அனுபவிக்க ஏற்பட்டதாக பழைய கதைபோல் பட்டாலும் இன்றைய நடைமுறைகள், சூசைக்கும் மேரிக்கும் இறை வார்த்தைகளின் அனுபவங்களைப் பெறவைத்தது.



''இந்த வீதியால எங்க போகிறோம்'' மேரியின் கேள் விக்குப் பதில் சொல்ல சூசைக்கு சங்கடமாய் இருந்தது. அவனுக்கும் அது புதிய பயணம்தான். சொந்த இடத்தை விட்டுப் புறப்பட்ட எல்லோருக்கும் ஏற்பட்ட, அனுபவத்தை அனுபவிக்கும் போதுதானே அந்த நிலையை சரியாக உணர முடிகிறது. தன்னை ஒரு குடும்பத் தலைவனாக நினைத்து பதட்டத்தை அடக்கிப் பொறுப்புடன் நடந்து கொள்ள கூறிய வார்த்தைகள்.

''இது முல்லைத்தீவுப் பகுதியால் செல்லும் பாதையாம், காட்டுப்பாதைதான். பலரும் போய் வந்த பழக்கத்தால் இது இப்போ ஒரு பிரதான பாதையாகி விட்டது'' என்றான் சூசை.

''இருட்டிலதான் இப்பாதையில் செல்ல வேண்டும் இல்லை என்றால்... உயிருக்கு ஆபத்துதான். இந்தச் சூழ லில் கதைப்பது கூட யாருக்கும் கேட்டாலே ஆபத்துத்தான்.''

இந்த மிரட்டல் பேச்சின் உண்மைகளை உணர முடி யாத பயப்பிரமை மேரியை வாட்டியது. உடல் உழைவும் மன உழைவும் பெரும் களைப்பினை மேரிக்கு ஏற்படுத்தியது. இருந்தும் மௌன ஊர்வலத்தில் செல்லுவது போல் பெரும் சிரமத்தைத் தாங்கிக் கொண்டாள். அவள் கையைப் பற்றி வந்த சூசைக்கு அவளது கையின் இறுக்கம் அவளது களைப் பினை உணர்த்தியது.

''மேரி... மேரி .. களைப்பு என்டா கொஞ்சம் இருந்து போவம்.'' ''ஐயோ நீங்கள் சத்தமாக கதைப்பது எனக்கு பயமாய் இருக்குது.'' ''என்ன செய்வது மேரி துன்பம் ஏற்றுக் கொண்டு சென்றால்தான் நல்ல சுகத்தையும் அனுபவிக் கலாம்.''

''இப்பிடி ஒரு கஸ்ரம் கடவுள் நமக்கு விட்டுவிட்டாரே.''



RangaRakes

Tamilnavarasam.com

''பாத்தியா நீ கூட மனம் தளருகிறாயே! பாலைவன பயணத்தைக் கடந்து அந்தப் பாலனைப் பெற்றெடுக்க அந்த அன்னை எத்தனை துயரைத் தாங்கியிருப்பாள். இப்படி பல மைல்களைக் கடந்துதானே அவளும் செல்ல வேண்டியிருந்தது.''

அவனது பேச்சுகள் இறைபக்திக்கு வலுவூட்டுவதுடன் அவனது மனதிலும் அந்த நிகழ்வுகளை ஒருகணம் உணர வைத்தது.

மழை நீரால் வெள்ளக் காடான இடத்தை மூட்டை முடிச்சுகளுடன் ஆற்றைக் கடப்பது போன்ற பயணம் கிளாலிப் பயணம் எனக் கூறிய இடமாக இருக்கும் என எண்ணிய சூசை மிக சிரமத்துடன் கடந்து செல்கையில், அந்த இருளில் அருகில் செல்பவர்கள் கூட யார் யார் என புரிந்து கொள்ள முடியாத பயணம். பலதரப்பட்ட தோற்றங்களில் தங்களின் வசதி வாய்ப்புகள், பொருள் பண்டங்கள், பட்டம் பதவிகள், எல்லாம் மறந்த ஒரு வெறுமை நிலையில் பயப் பிரமையுடன் பயணம் செய்வோரின் முனங்கலும் உறவுகள் பிரிந்த நிலைகளையும் எடுத்தியம்பின சூசைக்கு.

''மேரி... மேரி... கொம்படியைக் கடந்திட்டம் தானே! இந்த மரத்தடியில் கொஞ்சம் தங்கிச் செல்வோமா?'' என்ற சூசையின் வேண்டுகோளுக்கு, ''இந்தக் காட்டிலா!... எப்படியும் அடுத்த கிராமத்துக்கு நடந்து போவோம்.'' என்ற மேரியின் தளதளத்த குரல் ஆறுதல் கூறின. எந்த தைரியமும் இல்லாத சூசையின் மனதில் அவளது கர்ப்பிணிக் கோலம் சூசைக்கு கண்ணீரைப் பனிக்கச் செய்தது.

எல்லோர் மனதிலும் பயப் பிரமையுடன் செல்லுகையில் சூசையின் மனமோ கடவுளின் படைப்புகளை எண்ணி வியந்தவனாய், மனிதனை மனிதன் அழிக்க முற்படுகிறான். அந்த மனித மனங்களை மாற்றத்தானே மனித உருவில்



இறைவனே பிறந்தார். அந்த மனிதராலே அவரையே அழிக்கவும் அந்த மனிதன் துணிந்தான். இந்த மனிதப் பிறப்பின் மகத்துவத்தையுணர்ந்தால் இந்த மரணங்கள், இந்த அழிவுகள், இந்த அடக்கு முறைகள், இந்த அவல நிலைகள் எதுவுமே இடம் பெறாதே.'' என்ற சலிப்புடன் வேதனைகளையும், சோதனைகளையும் தாங்கிச் சென்றவனுக்கு மேரியின் நடைத்தளர்வு அவனது நம்பிக்கையை இழக்கச் செய்தது.

நட்டாற்றுப் பயணம் போல இடைநடுவே தளர்ச்சியுற்றாலும் தரித்துச் செல்ல முடியாத அந்தப் பரந்த வெளி பெரும் சவாலாய் இருந்தது. தொலைவில் ஓர் கிராமம் சன நடமாட்டமுடன் அதிகாலைப் பொழுது புலர்ந்தபோது நம்பிக்கை விதைகளை மனதில் விதைத்தவனாய் விரைவுபடுத்தினான். நடையினால் மேரியின் கால்கள் வீக்கமுற்று உடல் இளைப்புடன் சுமையும் ஓரடி கூட நகர மறுத்த உடல் வலிகளும் அந்த விடியலின் சூழலில் நம்பிக்கைக் கூற்றுக்கள் மனதில் எழ இறுதி முயற்சிபோல் வேகம் பெற்றன.

ஏதோ எதிர்பார்ப்பு குதூகலம், அக்கிராமத்தவரிடையே இருப்பது கண்டு நம்பிக்கையுடன் சூசை குடும்பத்தினர் மட்டுமல்ல, அந்தப் பயணத்தைத் தொடர்ந்த பல ஜீவன்களும் புதிய உத்வேகத்துடன் நெருங்கினார்கள். ஆலயம், பாடசாலை, எங்கும் நிறைந்திருந்த பல பகுதிப் பயணிகளும் இடம்பெயர்ந்த ஜீவன்கள் தான் என்பதனை அவர்களது பொட்டலங்களும், ஒதுக்கிடங்களும் நிரந்தரமற்ற சூழலை நினைவுபடுத்தினாலும் அதில் ஒதுங்குவதற்கு சூசையும் மேரியும் முயன்றும் முடியவில்லை.

முன்னம் வந்தவர்கள் நிறைந்து விட்டதால் அந்த முகாமையும் மூடிவிட்டார்கள். ''புதியவர்கள் வேறு இடம் செல்லவும்.'' என மாட்டப்பட்டிருந்த விளம்பரப்பலகை ஏமாற்றத்தைக் கொடுத்தது. அன்று மட்டுமல்ல இன்றும் இன்னும் மக்களுக்கு ''சத்திரத்திற் கூட இடமில்லை என



RangaRakes

Tamilnavarasam.com

ஏக்கமுடன் அருகில் உள்ள வீட்டு வாசல்களை நாடிய வனுக்கு பூட்டுக்கள் பலவும் ஏற்க மறுத்தன.

அந்தச் சூழலுக்கு மத்தியில் மழையும் பனியும், நுளம்பும், குளிரும், பசியும் களைப்பும் எல்லோ முகத்திலும் ஏக்கத்தை ஏற்படுத்த மணி ஓசையும் மங்கள நிகழ்வுகளும் அக் கிராமத்தில் ஆங்காங்கே கிறிஸ்மஸ் நினைவை நினைவூட்டிக் கொண்டிருந்தன. பாதுகாப்பு எனத் தேடி வந்த இங்கும் தொடரும் அதே சீனவெடிகளும் வாண வேடிக்கைகளும் போலவே பலவித முழக்கங்கள் மத்தியில் பாலன் குடில்கள் போல அகதிக் குடில்களெல்லாம் முன்னைய கிறிஸ்மஸ் நிகழ்வுகளை நேரிலே காணும் அனுபவத்தை ஏற்படுத்த, இருள் சூழ்ந்த வேளை வழியேதுமின்றித் தவிக்கையில் மேரியின் பிரசவ வேதனை கண்டு அந்த வீதியில் இருந்து ஓரத்தே இடிந்து சரிந்து சிதைந்த கட்டடித்தை நோக்கி மேரியைக் கூட்டிச் சென்றான் சூசை.

தூரத்தே கேட்கும் ஆலயமணி ஓசையும், அந்த இருளில் மேரியின் முனங்கலுடன் மழலையின் சிணுங்கல் ஒலியும் அவன் செவிப்பறையிற் பட்டு சூசையின் மனதிற்கு மகிழ்ச்சியூட்டும் நம்பிக்கை ஒளிக்கீற்றாக, புதிய பாலகனின் பிறப்பொன்றை இந்த மண்ணும் தாங்கிக் கொண்டது. ●



# நிவாரணம்

பாடசாலை ஓய்வு நாட்களை எதிர்பார்த்திருக்கும் மாணவர் மனங்களின் எண்ணங்கள் பலவிதம் சிறகடிக்க, படிப்பு சுமையாக இருக்கும் சிலருக்கு, விளையாட்டு சுவையாக இருக்கும் சிலருக்கு, ஓய்வு மகிழ்வைத் தரும் சிலருக்கு. ஆனால் சீலனுக்கோ உறவுகளை, ஊரை, தான் வாழ்ந்த வீட்டை, சூழலைச் சென்று தரிசித்து விட வேண்டும் என்றுதான் ஆவலாய் இருந்தான். நினைத்தாலும் உடன் சென்று வர முடியாத தூரதேசமாகி விட்டது மன்னார்ப் பிரதேசம்.

அவன் கல்விக்காக கடந்து வந்த பல தடைகள் புதிய சூழலுடன் யாழ் நகரில் கல்வி பயின்று தன் அறிவுப் பசியைத் தீர்க்க முனைந்தான். புதிய நண்பர்கள் கூடிய

RangaRakes
Tamilnavarasam.com

விடுதி வாழ்க்கையில் சீலனுடன் இவ்வாலையைச் சேர்ந்த செருபீம் என்ற அவனது வயதையொத்தவனும் விடுதி நண்பராக இணைந்து கொண்டார்கள்.

"செருபீம் உனக்குச் சொந்த வீடு இங்கு பத்து மைலுக்குள் இருந்தும் லீவுக்கும் போகாமல் நிக்கிறியே! ஏன் போனாலும் உடனே வந்து விடுகிறியே! உனக்கு அங்க நிக்கப் பிடிக்கேல்லையா?" என தன் வீட்டின் ஆர்வத்தில் கேட்பான் சீலன்.

"சீலன் வீட்டில நிற்க யாருக்கு விருப்பம் இல்லை. யாழ்ப்பாணத்தில இருக்கிறபடியாத்தானே படிப்புகளுக்கு ரியூசன் எடுத்து சேர்ந்து படிக்கிறதால நல்லாப் படிச்சிடலாம் எண்டுதான் மச்சான் நான் போனாலும் உடன வந்திடுவன். எங்கட ஊரில் செல் வந்து அப்பாவைக் கொண்டிட்டுது. இனி நானாவது படிச்சு ஒரு நிலைக்கு வராட்டி யார் பாப்பினம் எங்களை."

"செருபீம் நான்தான் போகவர வசதிக்குறைவால நிக்கிறன். உங்களுக்குத்தான் அதிக தூரமே இலலை. எங்கட ஊரில வசதி வாய்ப்புகள் இங்க போல இல்லைத்தான் ஆனா தோட்டம் தரவுகள் எப்பவும் விளைஞ்சு கொட்டும். மூன்று போக விளைச்சல் கிராமந்தான் முருங்கன். ஐந்து வயதில அப்பனைப் பறி குடுத்திட்டம். வீட்டில ஆறு பேரும் சின்னஞ் சிறுசு எண்டுதான் எங்கட கோவில் சுவாமி என்னையாவது படிச்சு முன்னுக்கு வரட்டும் என்று அனுப்பினதால இங்க வந்தன்." எனத் தன் சோகச் சுமைகளைச் சொல்லிக் கொண்டான் சீலன்.

"இங்க உனக்கு என்ன குறை சீலன்? படிப்பிலையும் நீ ஒரு புலியாயிட்டாய். இந்த முறை சோதினையிலையும் வென்றிடுவாய். இத்தின வருஷம் படிச்சதில இந்த பத்தாம் ஆண்டுப் பரீட்சை தானே எங்கட தலை எழுத்தையே நிர்ணயிக்கப் போகுது. இதில நீ அடிச்சிடுவாய என்ற நம்பிக்கை எனக்கிருக்கு மச்சான்" என்றான் செருபீம்.



"நீ நினைக்கிறதைப் பாத்தா செருபீம் உனக்கே உன்னில நம்பிக்கை இல்லாமப் பேசிறாய். பரீட்சையில படிக்கிறது மட்டுமல்ல எதிலும் துணிவும் வேணும். அதை இழந்தா தோல்விதான் செருபீம்" என்ற இருவரது பேச்சிலும் பரீட்சைப் பதற்றம் தொனித்தது.

குப்பி விளக்குடன் இடம் பெயர்வுகளும், பங்கர் வாழ்க்கையும் பழக்கப்பட்டு விட்ட பழையகால வாழ்க்கை போல பல வித கலக்கத்தோடு பொம்பர் அடி, ஷெல்லடி மத்தியில் பதற்றமுடன் பரீட்சையும் நடந்து முடிந்தது. இம்முறை எப்படியாவது வீடு சென்று வரவேண்டும் என நினைத்தவனாய்ச் சீலனின் சிந்தனை சிறகடித்தபோது.

"சீலன் நீ ஏதோ வெளிநாட்டில நிற்கிற மாதிரி வீட்டாரைக் காணாமல் இங்கேயே நிண்டு படிச்சு முடிச்சிட்டாய். வீட்டிலையும் உன்னைப் பார்க்க ஆசையிராதா? இந்த லீவிற்குப் போயிற்று வாவன்" என்றான் செருபீம்.

"எனக்கு எனது கிராமத்தை, வீட்டைப் பார்க்க ஆசைதான் செருபீம். என் அம்மா, சகோதரன் அந்தக் கிராமத்து உறவுகளைத் தரிசிக்க ஆசையாய்த்தான் இருக்கு அதால இந்த முறை நடந்தாவது போகத்தான் போறன்"

"சீலன் என்ர சைக்கிளைத் தாறன் அதில போய் எல்லாரையும் ஒருக்காப் பாத்திட்டு மார்கழி லீவைக் கழிச்சு வாவன். நானும் என் வீட்டில் லீவில நிண்டு ஊர் முந்திரிகை வாழைத்தோட்டத்தை, எங்கட கிராமத்தை, எங்கட சொந்தம் பந்தங்களை சந்திச்சு வாறன்" எனத் தங்கள் பயணத்தை இருவழியாய் மேற்கொண்டனர்.

நகரம் என்ன கிராமம் என்ன எல்லாமே களையிழந்த நிலையில் பயண அனுபவங்களும் மனதை நெருட்டியது. நினைத்தவுடன் காலை ஏறி மாலை அடையும் இடங்கள் எல்லாம் நாட்கள் வாரங்கள் என பயணங்கள் தொடர்



RangaRakes Tamilnavarasam.com

வதும் மிதிவண்டி, உழவுயந்திரம் கடற்பயணம், கால் நடைப் பயணம் என மூன்று தினங்கள் சென்று மடு அகதி முகாமை அடைந்து விட்டான் சீலன்.

ஐந்து வருடங்களின் பின் அவனது உறவின் தரிசனங்கள் பலரது இழப்புகளுடன் சொந்த மண்ணிலே சொந்த உறவுகள் அகதிகளாக மாற்றப்பட்ட புதிய அனுபவங்கள் அவனுக்கும் புதிய பாடத்தைக் கற்பித்தது. புத்தகப் பூச்சியாய் பரீட்சைக்கு மட்டும் படித்து வாழ்க்கையிற் காணும் நிலைகளுக்கு பதில் காண முடியாத விரக்தி அவனைப் பெரிதும் வாட்டியது. இன்று அவனும் ஒரு புது அகதியாகப் பதியப்பட்ட போது அவன் மனதில் பல கேள்விகள் எழுந்தன.

அகதி வாழ்க்கையில் நிவாரணத்திற்காக வாழும் சனத்தொகைக்கு ஒருவனாக மட்டும் வாழும் வாழ்க்கையில் அர்த்தங்கள் என்ன? நானும் முடங்கி, பதுங்கி முதியவர்களுடன் ஒருவராக உணவுக்காக வாழும் உயிர்ப் பிராணியாகி விட்டேனா? கற்கும் கல்விக்கும் வாழ்க்கைக்கும் உள்ள முரண்பட்ட நிலையும், தன் கிராமமே இடம் பெயரும் அவல நிலை சீலனின் மனதில் அமைதியைக் குலைத்தது.

இந்தக் கொடிய வாழ்க்கையை ஏற்க சீலனின் மனம் இடம் தரவில்லை. உறவினரதும் வீட்டாரினதும் உபசரிப்புக்கள் தன்னை ஓர் உயர் நிலையில் வைத்துப் பார்ப்பதை உணர்ந்தவன் தன்னிடம் எதிர்பார்க்கும் பொருத்தமற்ற சூழலையும் ஊரார் அனுபவித்து வரும் இன்னல்களையும் எண்ணிக் கலங்கியவனாக இதுவரை ஏதோ ஓர் உலகத்தில் வாழ்ந்து விட்டோம் இனி வாழ்க்கையில் தரிசிக்க வேண்டியவற்றிற்கு பதில் கண்டு வெற்றி கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தவனாய் தன்னையே மாற்றிக் கொண்டான் சீலன்.

☐ ☐ ☐

இளவாலை செல்லப் புறப்பட்ட செருபீம் சென்ற முறை தன் சித்திரை லீவுப் பயணத்தை மனதில் இரைமீட்டுப் பார்த்தான்.



''தம்பி! நீ நல்லா வளர்ந்திட்டாய். இனி இங்க இருந்தா உன்னைக் காப்பாற்ற ஏலாது. இந்தப் பக்கம் செல்லடியும், பொம்பரும் சுத்துது. பிறகு அவங்கள் உன்னை விடமாட்டாங்கள். அதுதான்'' அம்மாவின் முணுமுணுப்பை ஏற்க மறுத்தான் செருபீம். ''எனக்கு எப்ப லீவு விடும் வீட்டாரோட இருப்பம், தோட்டம் துரவைப் பாப்பம் எண்டா என்னை ஏனம்மா அன்னியனாய் பிரிச்சுப் பேசுறீங்கள்.''

''தம்பி! நீ எங்கட நிலை புரியாமல் கதைக்கிறாய். இப்ப உள்ள குடும்பப் பொறுப்புக்கு நீதானே முகம் கொடுக்க வேண்டும். அதுதான் இங்க இருந்து இந்தச் சண்டையளிலும் மாட்டுப்படாம அங்கால எங்கயும் போனால் தானே நாலு காசும் உழைச்சுக் காப்பாற்றலாம். அதுதான் உன்னைக் கொழும்புப் பக்கம் அனுப்பினா வெளியில நிக்கிறதுகளிட்டச் சொல்லி அங்காலை எடுப்பிக்கலாம். எதுக்கும் உடன புறப்படப்பார் தம்பி!'' என்றாள் செருபீமின் அம்மா.

மீண்டும் நரகவாழ்க்கை தானா என நகரவாழ்க்கையை எண்ணும்போது சலித்துக் கொண்டான். வளம் கொழிக்கும் பிரதேசம், முந்திரிகை, வெற்றிலை, வாழை, கிழங்கு வகைகள் எனப் பல்லினப் பயிர் வளர்த்து வளங்கொண்ட தன் கிராமத்தைத் தரிசிக்கச் சென்ற செருபீமுக்கு தன் சூழல் தன்னை அந்நியப்படுத்தி அகதியாக்கிவிட திட்டமிட்டதை எண்ணி வேதனைகளைச் சுமந்தவனாய் திரும்பியது கூட இவ்வருடம் படிப்பின் முடிவைக் கண்டு செல்வோம் என்ற முடிவோடுதான். அந்த நினைவுகள் கரைந்து மீண்டும் வீட்டாரை தரிசிக்கக் கிட்டிய மார்கழி லீவும் வந்தது. ஆனால், இன்றைய நிலைகள் எதிர்பாரா மாற்றங்களால் வீட்டிலும் மன மாற்றம் ஏற்பட்டு இருக்கும் என்ற நினைவோடு பாடசாலை விட்டுப் புறப்பட்டான் செருபீம்.

மார்கழி லீவு நத்தார், புத்தாண்டு மகிழ்வுகள் யாவும் சிதறடிக்கப்பட்ட நிலையில் இளவாலை மட்டுமல்ல அதனைச்



RangaRakes
Tamilnavarasam.com

சூழ்ந்த பல பகுதியும் மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் அகதியாக்கப்பட்ட நிலையில் வாழ்வதைக் கண்ட செருபீமிற்கு, இன்றும் வீட்டார் கூறியது இதுதான் ''தம்பி! இங்கு நிற்காத எப்பிடியும் கொழும்பிற்குப் போய் விடு. அங்க படிக்கலாம். அங்காலயும் போகலாம். அகதிக் காசும் கிடைக்கும்.'' என்ற குறுக்குவழிச் சிந்தனைகள் அவனது பயணத்தைத் தூண்டவைத்தது.

பாடசாலை விடுமுறை எதிர்பார்த்ததை விட ஏமாற்றத்தை ஏற்படுத்தி மீண்டும் பரீட்சை முடிவுகளை அறிய நகருக்குப் புறப்பட்டான் செருபீம்.

□ □ □

மிதிவண்டியில் மன்னாரில் இருந்து புறப்பட்டு யாழ் நகர் வரும்போது, அவனது மனச் சுமைகள் பலமாகவே அழுத்தும் நினைவுகளை தாங்கியவனாக புதிய பாடத்தைக் கற்று வந்தவனுக்கு பரீட்சை முடிவுகள் வியப்பாய் இருக்கவில்லை. நண்பனின் மிதிவண்டியைக் கொடுத்து விட வேண்டும் என்ற உந்துதலும் களைப்பின் மிகுதியும் பாடசாலையில் நண்பனைக் கண்டதும் இருவரும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பரீட்சை முடிவுகள் பலருக்கு மகிழ்வைக் கொடுத்தபோதும் சீலன் அதைவிட மேலாக தான் பிறந்த மண்ணின் நிலையையே எண்ணிக் கலங்கியவனாக இருந்தான்.

பாடசாலை மண்டபத்தில் முடிவுகள் அறிவிக்கப்பட்டு அதிபர் உரையாற்றினார். ''சீலன் பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்ததோடு திறமைச் சித்தி பெற்றுக் கொண்டமைக்காக பாடசாலை நிர்வாகம் புலமைப் பரிசில் வழங்கியுள்ளது.'' என தலைமை ஆசிரியரின் புகழாரம் பாடசாலை மண்டபம் அதிர கரகோஷத்துடன் மாணவர்கள் சீலனை வாழ்த்திக் கொண்டனர்.



நன்றி தெரிவிக்க எழுந்தான் சீலன். பாடசாலை அரங்கு நிசப்தமாக அரங்கில் இருந்த எல்லோரும் அவனது குரலுக்கு செவி கொடுத்தபோது, ''உண்மையில் எனக்குக் கல்விச் செல்வத்தைத் தந்து உருவாக்க உதவிய ஆசிரியர், மாணவர்களின் பங்களிப்புத்தான் இந்தப் பாராட்டுப் பெறவும் காரணமாய் இருந்தது. இந்த மண்ணில் கற்ற கல்வியை இந்த மண்ணிற்கே பயன்படுத்தவும் என் முயற்சிகள் பயன் தர வேண்டும். ஆனால் இன்று என் கிராமம், என் எனது இனமே நிவாரணம் தேடும் ஜீவன்களாக சொந்த மண்ணிலே அகதியாக அலைகிறது. என் சொந்தக் கிராமம் அன்று விவசாயத்தில் பச்சைச் சேலை கட்டித் துள்ளித் திரியும் பெண் போல விவசாயிகளின் உழைப்பும் அணிகலனாக அழகு பூத்து இருந்தது. இன்று அவை நிர்வாணமாக்கப்பட்டு விட்ட கன்னியாக மாற்றானின் கால்பட்டு சிதைந்து கிடக்கின்றது. அந்தக் கறையைப் போக்கி என் உறவுகள் என் கிராமத்தவர் என் குடும்பத்தவருக்கு நிம்மதியாக வாழும் நிவாரணம் கிடைக்க அவர்களை அந்த மண்ணிலே உழைத்து உண்டு மகிழும் மக்களாக வாழ வைக்க எனது கல்வியோடு என் மண்ணையும் மீட்டு எடுக்கும் பணியிலும் இணைந்து இரண்டும் சேர்ந்த வெற்றியையே எதிர்பார்க்கிறேன். இதுவே எனது இலட்சியமும் ஆகும்.'' என்ற வீரம் கலந்த வைரவரிகள் எல்லோர் இதயத்திலும் பலமாய் தைத்துக் கொண்டது.

''நான் மட்டும் வாழ்ந்து வளர முடியாது. நமது இனம், மொழி எனப் பேச்சோடு இராது அதைக் காத்து வளர்க்க எமது மண்ணை அதில் வாழும் மக்களை சுதந்திரமாக வாழ வைப்பதில் எமது பங்களிப்பை செய்வதற்காய் என்னை மாற்றிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எம் உடன் பிறப்புக்கள் நிவாரணம் இன்றி அகதியாய் அலைய, நான் மட்டும் ஒதுங்கி வாழ்வதில பயன் இல்லை என்பதே என் எண்ணம் ஆகவே கல்வியும என் கடமையும் இரு கண்களாக ஏற்று நாம் சொந்த மண்ணில் சுதந்திர வாழ்வு வாழ என் கிரா



RangaRakes
Tamilnavarasam.com

மத்துக்குச் சென்று வாழ விரும்புகிறேன்.'' என நண்பர்கள், ஆசிரியர்களுக்கு நன்றி கூறி பிரியாவிடை கூறினான்.

எல்லோர் முகத்திலும் சீலனின் கூற்றின் அர்த்தங்கள் தெரிந்தன. கடமையும் உண்டு என்ற உணர்வும் உறுத்திக் கொண்டன. இன்று கொழும்பில் நடக்கும் நிலைகளும் சீலன் கூறும் கருத்துக்களையும் உணர்ந்த செருபீம் கண் கலங்கியபடி கட்டித் தழுவியவனாக.

''அந்தரிக்கும் ஜீவன்களாய், அலையும் அகதி வாழ்க்கையை உணராமல் மாய வலையில் சிக்கி, அக்கரைப்பச்சையாய் எண்ணி அலைவதை விட, சுதந்திர புருஷர்களாய் எம் மக்களுக்கு நிரந்தர நிவாரணம் கிடைக்க என்னையும் மாற்றிக் கொண்டேன்.'' எனக் கூறி சீலனின் பாதையில் நண்பனும் நடந்தான். ●

தை 1993



# மகிழ்வின் மறுபக்கம்

காலைவேளை அந்த மிதிவண்டியின் மணி ஓசைச் சத்தம் தினம் அவளை ஏமாற்றியே வந்தது. உறவின் தரிசனத்தைக் காண வெளிநாட்டு கடிதங்களை எதிர்பார்க்கும் ஜீவன்களில் ஒருத்தியாகவே புவனேஸ்வரி அம்மாளும் அடிக்கடி தபாலுக்காக காத்து காலைப் பொழுதைக் களித்திடுவாள். நத்தை வேகத்தில் வரும் எமது நாட்டுத் தபால் சேவையும் ஏக்கத்தை இரட்டிப்பாக்கும். அதன் வரவே சிலரது வாழ்வுக்கும் ஆதாரமாகிறது.

செல்வரெத்தினத்தின் மனைவி புவனேஸ்வரி அம்மாள் மூன்று குமர்களுடன் இரண்டு சிறுவர்களுமாக வீட்டில் இருந்து கொண்டே சமையல், சாப்பாடு, ஊர் வம்புகளை அறிவதற்கு செல்லமுத்துக் கிழவியை எதிர்



RangaRakes
Tamilnavarasam.com

பார்த்து இருப்பதும், வீட்டைச் சுற்றியிருக்கும் பொட்டு வேலியால் சூழவுள்ள வீட்டுப் புதினங்களையும் தொலைக் காட்சியில் பார்ப்பது போலவே பார்த்து செய்திகளைத் தொகுத்துக் கொள்வதிலும் நாளும் பொழுதும் கரையும்.

செல்வரெத்தினம் தனியார் நிறுவனத்தில் சாதாரண லிகிதராக நகரத்திற் சென்று திரும்புவதுடன் தனது பரம்பரைப் பெருமைகளைப் பறைசாற்றி தன் காலத்தைச் செலவு செய்வார். மூத்த மகன் வசந்தனை, முதிசத்தை விற்று ஒருவாறு பிரான்ஸ் நாட்டுக்கு ஏற்றி விட்டதும் அவர்களின் மாற்றத்திற்கு ஒரு காரணம் தான். இன்று மகன் சென்று ஆறு வருடங்கள் ஓடி முப்பத்திமூன்று வயதையும் கடந்து விட்டான். வாழும் வீட்டின் முன் மாதிரியிற்றான் அங்கு வளரும் பிள்ளைகளும் உருவாகும் என்பதற்கு பொறுப்பற்ற தன்மையுடன் வளரும் செல்வரெத்தினத்தின் கடைக்குட்டி தக்க சான்று. நாகரீகம் என்ற போர்வைக்குள் உடையும், நடையும் அவனை வளர்த்துக் கொண்டது.

ஆறு பேரைப் பெற்றெடுத்த செல்வரெத்தினம் புவனேஸ்வரி தம்பதிகளின் வருவாய்க்கு பிரான்ஸ் நாட்டுப் பணம் தான் பெரிதும் கைதூக்கியது. ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் சிக்கன வாழ்க்கையில் பழக்கப்பட்ட போது செல்வரெத்தினத்தின் உழைப்பு பெருமதிபபுள்ளதாகவே இருந்தது அவர் சொல்லுக்குக் கீழ்ப்பட்ட வாழ்க்கை அன்போடு வாழ்ந்த குடும்பம் இன்று எதற்கும் வசந்தனின் கடிதத்தை எதிர் பார்க்கும், நிர்வாகப் பொறுப்புக்களும் புவனேஸ்வரியின் கைக்கு மாறிவிட்டது.

ஓய்வாக இருந்து பின்னி, மெழுகி, ஆடு, மாடு, தோட்டம் என வளர்த்து சீவியத்தைச் சீர் செய்த செல்வரெத்தினம் தம் மகிழ்வுக்காக அடிக்கடி கொழும்பு சென்று தொலைபேசியில் குடும்ப தரிசனம் செய்து வருவதும், அவர் வருகைக்கு தொடராக மனைவி புவனேஸ்வரி பிள்ளைகளுடன் சென்று வசந்தனிடம் பணத்தைப் பெற்று வருவதிலும் வீட்டுத்தோற்றம் மாற்றம் கண்டது.

ஆதிகால வாழ்க்கை போல மாறிவிட்ட சூழலில் கப்பலை எதிர்பார்க்கும் கடிதத் தொடர்பை விட நேரில் சென்று தொலைபேசியில் தொடர்பு கொள்ள உயிரைப் பணயம் வைத்து தடைகளைத் தாண்டி வருவதில் சாதனை புரிவாள் புவனேஸ்வரி அம்மாள்.

வசந்தனின் பயணம் பிரான்சை அடைந்ததில் இருந்து கடிதங்கள் மூலமே தன் உறவின் உயர்வைத் தரிசித்து வருவான். அவனுக்கு வரும் கடிதங்களில் யாழ்நகர தாக்குதல் பாவும் தன் வீட்டிற்குத் தான் நடந்தது போன்ற கடித விபரங்கள் அவன் மனத்தை பெரிதும் வாட்டியதால் அவனும் ஓய்வின்றி உழைத்து வீட்டின் உயர்வைக் காத்து வந்தான்.

அவனது பயணம் இதுவரை வீட்டிற் பல சுமைகளைத் தீர்த்து காணிகள் வேண்டப்பட்டதும், வீடுகள் கட்டப்பட்டது மாக மூன்று குமருக்கும் சீதனம் என்ற போர்வையில் மாப்பிள்ளைகள் வாங்கப்பட்டது. இவையெல்லாம் அவனது உழைப்பின் பயன் என்பதை விட அது அவனது கடமை என்றே கூறிக் கொள்வார்கள் வீட்டார்.

உறவின் மகிழ்வு முதல் உற்றாரின் பிரிவும் படச்சுருள் களாகவே அவன் கரங்களில் செலவின் பட்டியலுடன் கிட்டும். வசந்தனின் நண்பன் மூர்த்தி பயணம் அனுப்பிய நாள் முதல் வசந்தன் வீட்டிற்தான் அவனது நிலைகளை அறிந்து வருவான். வசந்தனிடம் இருந்து மூர்த்தி எதையும் எதிர் பாரா விட்டாலும் நட்பின் தொடர்பை ஒரு கடிதமூலமாவது தொடரவில்லையே என்ற கவலையும் அவன் மனதை வாட்டத்தான் செய்தது. ஏனைய நண்பர்கள் மூர்த்தியிடம் வசந்தனைப் பற்றிக் கேட்டால் வேலைப்பழுக்களும், நேரமின்மையும் என அவனுக்காகவே கதைத்து சாட்டுதல் கூறுவான்.

"ஏன்ரா மூர்த்தி இத்தனை வேலைக்குள்ளும் தானே காவிக் கமந்து கதைச்சு அவனைப் பயணம் அனுப்பி மகிழ்ந் திட்டே. அதை நினைக்கக் கூட நேரமில்லாத நண்பன் தானா உனக்குக் கிடைச்சான்!" என நண்பர்கள் கேட்டால் சிரித்





RangaRakes

Tamilnavarasam.com

துக் கொண்டே சொல்வான். "என் மச்சான், நீங்கள் கூட முன்பு போலவா இப்ப சந்திக்கிறியள். புதுசா ஒருத்தியைக் கலியாணம் கட்டிப் போட்டு இங்க இருந்த கூட வருஷத்தில ஒருக்கா சந்திக்க அவவுக்கு நேரமில்லை எண்டு சொல்லிச் செல்வீர்களே! அதைவிட இது பரவாயில்லை." என்று தன் கவலையை தனக்குள் அடக்கிக் கொள்வான்.

மூர்த்தியின் திருமணம் வந்தபோது கூட வசந்தனுக்குத் தெரிவிக்க பிரான்ஸ் நாட்டு விலாசம் தேடிச் சென்றான். அப்போது புவனேஸ்வரியம்மாவும் பிள்ளைகளும் சேர்ந்தே சொன்னார்கள். "இப்ப வசந்தன் லீவில லண்டனுக்குப் போயிருக்கிறார். இனி வந்த பிறகும் வீடு மாறுவாராம். அதால புது விலாசம் இன்னும் வரேல்லை." என்று புதுப் பொய்யைக் கூறி நம்பச் சொல்லுவார்கள். இதைக் கூட புன்னகையால் ஏற்றுக் கொண்டு திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையாகி விட்டான் மூர்த்தி. இதுவரை விலாசம் இல்லாத நண்பனின் விபரம் புரிவதில்லை அவனுக்கு.

பிள்ளைகளுக்குத் திருமணங்கள் நிறைவேற்றி செல்வரெத்தினமும் ஒய்வு பெற்று வீட்டோடு ஒதுங்கிவிட்டார். புவனேஸ்வரியோ கொழும்பு சென்று திரும்பும்போது ஒருநாள் கண்ட மூர்த்தி, "வசந்தன் எப்பிடி இருக்கிறான்? அவனுக்கு கலியாணம் ஏதும் ஒழுங்காக்கீற்று வாறியளோ? எப்ப உங்களைப் பார்க்க வருவான்?" எனக் கேட்டான்.

புவனேஸ்வரிக்கோ புட்டுக் கொண்டு வந்தது கோபம். "ஏன்! அவன் என்ன கலியாண விசரிலா திரிகிறான். இப்பதானே போனவன். இன்னும் அவனுக்கு காலம் கிடக்கு. வீணா இப்ப நாடு இருக்கிற சீரில இங்க வந்து என்ன சாகச் சொல்லுறியளே! அங்க அவன் நிம்மதியா இருக்கிறது உங்களுக்குப் பிடிக்கேல்லையோ?" எனச் சினந்து கொண்டாள். இதைக் கேட்ட மூர்த்தி,

"வசந்தன் அங்க ஏதும் பாத்திட்டாலும், நீங்களாக ஏதும் செய்து வைச்சால் எண்டுதான்..." எனக் கூறிய போது



"உங்கட சகவாசம் இல்லாம இருக்கிறதாலதான் அவனுக்கு அந்த எண்ணமே இல்லை. வர விருப்பம் எண்டுதான் சொன்னது பிள்ளை. நாங்கதான் இங்க வந்தா இங்க உள்ளதுகள் அவனைக் கெடுத்திடும். ஆகவே வரவேணாம் எண்டு சொல்லிற்று வந்தனான். சின்னவளையும் அனுப்பிக் கொண்டு நாங்களும் கொழும்பில வீடு எடுத்த, பிறகு முடிஞ்சா அங்கால போய்த்தான் அதைப்பற்றி யோசிப்பம். அதுக்குள்ள என்ர பிள்ளை செய்யாது. அவனுக்கு இன்னும் வயசு இருக்குத்தானே!" என்று குழந்தைப் பிள்ளைபோல முப்பத்தி மூன்று வயதிலும் கூறியது சிரிப்பாகத்தான் இருந்தது மூர்த்திக்கு.

நாட்டுச் சூழலில் பொருளாதாரத் தடைகளைத் தாங்கிய குடும்ப வாழ்க்கை மூர்த்திக்கு பெரும் சுமையாய் இருந்ததால் காலத்துக்கு ஏற்ற தொழிலாக மண்ணெண்ணெய், விறகு, தேங்காய், பொச்சு மட்டை எனத் தொகையாகப் பெற்றுவர பல மைல் பிரயாணங்கள், பலவித தடைதாண்டி வருவதில் அவனது வாழ்க்கை செல்லும். சில சமயம் போகும் போது பிரயாணிகளை ஏற்றி இறக்குவதிலும் பிரயாண வண்டியாக தன் மிதி வண்டியை மாற்றிக் கொள்வான். அந்த மிதி வண்டி வியாபாரிகளின் தொகையோ இன்றைய காலத்தில் பல குடும்பங்களைக் காப்பாற்றும் தொழிலாக மட்டுமல்ல, பொருளாதார தேவைகளைக் கூடத் தீர்க்கும் வழியாகவும் அமைவது காலம் அறிந்த உண்மைதான்.

அன்று பிரயாண வசதியற்ற நிலையில் நகரம் ஸ்தம்பித்தபோது அவசரமாகச் செல்ல பல மூட்டை முடிச்சுகளுடன் நின்றவர்களுடன் புவனேஸ்வரியும் நகரத்தில் நின்றபோது மூர்த்தியை அங்கு கண்டதும் நெருங்கிய உறவு போன்று உரையாடி தன் பயணத்தைத் தொடரவும் துணையாக வரும்படி அழைத்தாள்.

"என்ன மூர்த்தி கனநாளாய் வீட்டுப்பக்கம் காணேல்லை," என்றாள்.

"எங்க நீங்க இந்தப் பக்கம் இண்டைக்கு? அங்கால போக ஏலாது சண்டை நடந்து கொண்டு இருக்கு நாங்களும்



RangaRakes
Tamilnavarasam.com

போய்த்தான் குறுக்கு வழியால வாறம். நாளைக்கு இல வேளை சண்டை ஓய்ஞ்சா போகலாம்.'' என்றான்.

''மூர்த்தி உனக்கு தெரியும் தானே தம்பியோட கதைக்க வேணும், சின்னவனுக்கு விசா எடுக்க வரச்சொன்னவன். அதுதான் அவசரமாகப் போக வேணும், விட்ட சொல்லிற்று வாவன் கொழும்புக்குப் போய்ற்று வருவம்.''

''இது உடன முடியுமா? உங்களைப் போல வீட்டை விட்டிற்று வர நான் என்ன ஒண்டிக் கட்டையா?'' என்றான் மூர்த்தி.

''இப்ப சண்டை எண்டா நாங்க போறது பிந்தினாலும் வீட்டை ஆயத்தப்படுத்திப் போட்டு வாவன்.''

''எனக்கென்னவோ ஊரில இருந்து. பிள்ளையளை விட்டிட்டு வாறதெண்டா......''

''நீ இப்ப எல்லாம் இப்பிடித்தான். ஆனா உன்ர சினேகிதன் உன்னை பெரிசா சொல்லுவான். எது எண்டாலும் மூர்த்தியிட்ட சொல்லி செய்வியுங்கோ எண்டு. நீ தான் தம்பியையே மறந்து போய்ற்றியே! அதாலதான் வீட்டுப் பக்கமே வாறதில்லை. சும்மா சாட்டுக்கு நண்பன் என்று சொல்லுறதில...''

''ஏன் அப்பிடிப் பெரியவார்த்தைகளை கொட்டுறியள். அவன் எங்க இருந்தாலும் நண்பன் நண்பன்தான்.''

''அப்ப, நம்பிச் சொன்னதைத் தானே நான் கேக்கிறன்.'' என புவனேஸ்வரி நட்பு எனும் அம்பை ஏவி விட்டாள்.

இந்த வார்த்தையில் இரும்பு மனமும் இழகிவிடும் நிலையில் அடுத்த வாரமே புறப்பட்டு விட்டார்கள்.

குட்டிக் குட்டி கிராமம் போலவே எமது மக்கள் அங்கு ஆறுமாதம், ஒரு வருடம், இரண்டு வருடம் என வெளிநாட்டு உறவை தரிசிக்க கொழும்பு நகரில் கொட்டல் என்ற போட்டுடன் அகதி முகாம் வாழ்க்கையும் அலங்கோல செயல்களும் உறவைத் தரிசிப்பது என சென்று அன்னிய நாட்டு பணத்தை தங்குமிடத்திற்கும், களியாட்டத்திலும் செலவழிப்



தோரணைக் கண்டு சித்தப் பிரமையே பிடித்துவிடும் போல் இருந்தது மூர்த்திக்கு.

புவனேஸ்வரி தன் காரியத்தில் கண்ணாக வரங்களைக் கேட்கும் பக்தனைப் போலவே தொலைபேசிக் கூண்டுக்குள் வெட்கத்தை விட்டு சத்தமாகக் கேட்டுக் கொண்டு நின்றாள். ஏதோ பேச்சில் தன்னோடு நண்பன் மூர்த்தி வந்திருப்பதை கூறினாள். வசந்தனோ மூர்த்தியோடு மிகுந்த ஆர்வம் கொண்டு அவனோடு கதைத்தான்.

நண்பர்களின் பேச்சுக்களை புவனேஸ்வரியால் பொறுக்க முடியவில்லை. ''வீணாக நேரம் போகுது. காசு கூடப் போகுது'' என புறுபுறுத்துக் கொண்டாள்.

''வசந்தன்! எப்ப வருவாய். நாங்கள் எப்ப நேர சந்திப்போம். உன்ர கலியாணத்திற்காவது வந்து போவன். உன்னைப் பார்க்க ஆசையாய் இருக்கு மச்சான'' என்றான்.

தொலைபேசி மறு பக்கமோ பதில் வரவில்லை. முனங்கலுடன் அழுகுரல் போற் தடுமாறியது.

''வசந்தன்! நான் ஏதும் தப்பாகக் கூறினால் மன்னிச்சிடுடா'' என்றான் மூர்த்தி. ''இல்லை மச்சான் இல்லை! இந்த வார்த்தைகளை இதுவரை கேட்டறியேன் நான்'' என விக்கலும் முனுங்கலும் மறுபக்கம் கேட்டது. ''என்னோடு பேச, என்னைப் பார்க்க, என்னோடு உறவாட உனக்கு மட்டும்தான் ஆசையா? எனக்கு இராதா? இப்படி உறவு ஒன்றாவது இருக்கே எண்டுதான்......''

''ஏன் மச்சான்! நான் மட்டுமா? உன் வீட்டாரும் இருக்கினம் தானே.''

''மூர்த்தி, வீட்டுக்கு எப்பவும் பணமும் பொருளும் அனுப்பினால் போதுமேயொழிய ஒரு நாளாவது என்னைக் காணவோ, என் எதிர்காலத்தைப் பற்றியோ சிந்திக்கவோ நேரமில்லை. இப்ப நான் ஒரு பொன் முட்டை போடும் வாத்துத்தான். அதுதான் எண்ணம் அவர்களுக்கு'' என்று விக்கி விக்கி அழுதபடி கூறும் போது அந்தரிக்கும் ஆத்மாவின் குரல் போல் அவன் நிலையுணர்ந்து மூர்த்தியின் கண்கள் கசிந்தன.



RangaRakes
Tamilnavarasam.com

வெறுத்தது போதும் என புவனேஸ்வரி அம்மாள் தொலைபேசியை மூர்த்தியிடமிருந்து பிடுங்கிக் கொண்டாள். "தம்பி வசந்தன்! நீ நல்லாயிருக்க வேணும். இவங்களைப் போல கஸ்ரப்படவா இங்க வரப் போறாய். இவன் சொல்லைக் கேட்டு இங்க வந்திடாத உன்ர உயர்வுகள் இவங்களுக்குப் பிடிக்கேல்லை. அதுதான் இப்படிச் சொல்லுறான்'' என்றாள் புவனேஸ்வரி அம்மாள்.

''அம்மா! நாடு எப்ப சீராகிறது. நாம் எப்ப வாறது. இந்த இன்னிலில பக்கத்தில நிண்டு உதவ ஒரு ஆண் துணையுமில்லாத இந்த இருந்து உழைக்கிறதில என்ன பயன்?'' என்றான் வசந்தன்.

''தம்பி! நீ வந்திடாத, வந்தா போக ஏலாது. பிரச்சனை பணம் அனுப்பு அது போதும். இதுகளைப் போல கெட்டழியாமல் அங்க இரு உனக்கு இன்னும் காலம் கிடக்குது. என புவனேஸ்வரி அம்மாள் கடிந்து கொண்டாள்.

"காலம் கிடக்குத்தான் அம்மா! உங்கட திட்டங்கள் நிறைவேறுமட்டும் உழைச்சு முடிந்நது போதும். நான் இன்னும் குழந்தைதான் உங்களுக்கு. ஆனா அன்பாகக் கதைத்து இன்ப துன்பங்களில் பகிர, என்ர உணர்வுகளைப் புரிஞ்ச நண்பருக்கு உள்ள அக்கறை உங்களுக்கும் வர காலம் கிடக்கு என்பதை உணர்த்திட்டனி.

நான் பார்க்க ஆசைப்படுகிறது நான் பிறந்த மண்ணையும், என் உணர்வுகளைப் புரிந்து கொண்டு என்னைப் பார்க்க விரும்பும் நண்பனையும் பார்க்கிறதோட மட்டுமல்ல, 'எந்தக் கஸ்ரம் இருந்தாலும் எங்கட மண்ணில வாழ்கிறதில் உள்ள நிம்மதி, எந்த நாட்டிலும் அனுபவிக்க முடியாது என்றதை உணர்ந்துதான் வாறன். பணத்தை மட்டும் எதிர்பார்க்கும் உங்களுக்கு பாசத்தின் உணர்வுகள் புரியகாலம் கிடக்குத் தான அம்மா!'' என்ற வார்த்தைகேட்டு திகைத்து நின்ற புவனேஸ்வரிக்கு மறுபக்கத் தொலைபேசி துண்டிக்கப்பட்டது கூட அவள் புலனுக்கு தாமதமாகவே தெரிநதது.



RangaRakes Tamilnavarasam.com